பொது நூலகம்

ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

01.10.2008 - மலர் 05, இதழ் 30





Price Rs. 20.00
ரூ. 20.00

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காபுல் தோட்டம் மீண்டும் பூத்துக் குலுங்குகிறது





புராதன காலத்து 'காபுல்' தோட்டம் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா? ஆப்கானிஸ்தானில் உள்ள இந்தத் தோட்டம் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தங்கள் காரணமாக வறட்சியுற்று கவனிப்பாரற்று பாழடைந்து காணப்பட்டது. தற்பொழுது தலிபான்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் அந்நாட்டு நிலைமை ஓரளவு சீரடைந்து இருக்கும் காரணத்தால் இந்தத் தோட்டம் மீண்டும் வண்ணமயமாக பூத்துக்குலுங்க ஆரம்பித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் அமைந்துள்ள இத்தோட்டம் அதன் பசுமைத் தன்மை காரணமாக 'பச்சைத் தீவு' என்று அழைக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு முதல் இத்தோட்டம் 'அகாகான் நம்பிக்கை நிதியம்' என்னும் கலாசார அமைப்பினால் சுமார் 27 ஏக்கரில் நகரில் மிகப் பெரும் பூங்காவாக மக்கள் மகிழ்ச்சியுடன் பொழுதைக் கழிக்கும் வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. வெள்ளிக்கிழமை நாட்களில் இங்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ரமழான் பண்டிகைக் காலத்தில் இஸ்லாமிய மக்கள் நோன்பு நோற்கும் கடமையில் ஈடுபடும் போது அவர்கள் ஓய்வெடுக்கவும் பொழுதை மகிழ்ச்சியாக கழிக்கவும் இத்தோட்டம் மிகவும் உபயோகமாக இருக்கிறது.

இந்தத் தோட்டம் 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் முகலாய சாம்ராஜ்ய ஸ்தாபகர் சஹிருடீன் முஹம்மத் பார்பரால் நிர்மாணிக்கப்பட்டதன் காரணமாக இன்றும் இது 'பார்பர்ஸ் கார்டன்' என்று அழைக்கப்படுகிறது. 1530 ஆம் ஆண்டு இந்தியாவில் இவர் மரணமடைந்தார். இவரின் உடல் ஆப்கானிஸ்தானுக்குக் கொண்டுவரப்பட்டு இத்தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இந்நாட்டில் யுத்தம் மூண்டதை அடுத்து இத்தோட்டம் அழிவடையத் தொடங்கியது. நூற்றுக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டன. தோட்டப் படுகைகள் குண்டுகளால் அழிக்கப்பட்டன. இத்தோட்டத்தின் பசுமையும் அழகும் பல காலமாக அலட்சியம் செய்யப்பட்டு வந்ததாகவும் இத்தோட்டத்தைப் பராமரிக்கும் கலாசார அமைப்பின் தலைவர் கூறுகிறார். அவர் மேலும் கூறிய போது ;

''இத்தோட்டத்துக்கான நீர்ப்பாசன நடவடிக்கைகள் செயலற்றுப் போய் இருந்தன. நீர்க்குழாய்கள் நீர்பாய்ச்சும் இயந்திரங்கள் திருடப்பட்டிருந்தன. சுவர்கள் உடைந்து பொடிப் பொடியாகின. பல கட்டிடங்கள் எரித்து நாசமாக்கப்பட்டன'' என்றும் அவர் கூறினார்.

பசுமையான செல்வச் செழிப்புள்ள ஒரு நாடு யுத்தம் காரணமாக எத்தகைய சீரழிவு நிலைக்குள்ளாகிறது என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

**-ராஜா**


## விஜய் சந்தா விபரம்

**'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.**

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

**பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்**
***(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)***

பெயர்: ..........................................
முகவரி: ..........................................
தொ.பே.இல: ..........................................
எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.


.................................. ..................................
கையொப்பம் திகதி

**உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**

**மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653**



# வரலாற்றுப் புகழ்மிகு ஹோட்டல் தீயினால் சேதம்

நோர்வேயில் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க 'ஃபிளெய்ஸ்ச்சர்ஸ்' (Fleischers) ஹோட்டல் கடந்த வாரம் செவ்வாயன்று தீ விபத்தில் சேதமடைந்தது. இந்த விபத்தில் எவரும் காயமடையவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு தங்கியிருந்த 82 விருந்தினர்களும் உத்தியோகத்தர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். தீயணைப்புப் படையினர் நீண்ட நேரம் வரை போராடித் தீயை அணைத்தனர்.

1889 ஆம் ஆண்டு பலகையால் கட்டப்பட்ட இந்த ஹோட்டல் உல்லாசப் பயணிகள் மத்தியில் மிகவும் பிரபல்யம் பெற்றது. இந்த ஹோட்டல் புனரமைக்கப்பட்டு இன்னும் சில நாட்களில் மீண்டும் திறக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

'ஃபிளெய்ஸ்ச்சர்ஸ்' ஹோட்டலை 1864 ஆம் ஆண்டு பிரெட்ரிக்லித் ஒருமஃபிளெய்ஸ்ச்சர்ஸ் என்பவர் ஸ்தாபித்தார். இவரும் இவருடைய மனைவி மெக்டலினும் இந்த ஹோட்டலை ஆரம்ப காலத்தில் நடத்தி வந்தனர்.

1800 ஆம் ஆண்டுக்கும் 1900 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பல முக்கியஸ்தர்கள் இந்த ஹோட்டலுக்கு வருகை புரிந்துள்ளனர்.

இங்கிலாந்து மன்னர் எட்வர்ட், ஜேர்மனியின் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த இரண்டாம் வில்ஹெல்ட், உட்பட பலர் இங்கு வருகை தந்துள்ளனர். வரவேற்புப் பகுதியில் காணப்படும் முக்கிய விருந்தினர்கள் புத்தகத்தில் இவர்களின் கையெழுத்து மற்றும் விபரங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

**-சீலன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான் வசந்தம் எம் மனங்களில் என்றும் வீசட்டும்!

**மகத்துவம் மிக்க ரமழான் எம்மை விட்டு விடைபெறுகின்றது. மீண்டும் ஒரு ரமழானை அடைந்து கொள்ளும் பாக்கியம் இனியும் எமக்குக் கிடைக்குமோ? என்கிற ஏக்கத்துடன் ரமழான் மாதம் முழுவதும் நோன்பிருந்த முஸ்லிம்கள் 'ஷவ்வால்' தலைபிறை பார்த்து பெருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.**

இந்த ரமழான் எமக்குக் கற்றுத் தருகின்றவைகளோ ஏராளம். தீய குணங்களிலிருந்தும் எம்மைத் தடுத்து நிறுத்தி, ஏழைகளுக்கு உதவி செய்யும் மனப்பான்மையை நம்முள் வளர்த்து விடுகின்றது. அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று, குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்குப் பசித்திருந்து, தாகித்திருப்பதனூடாக உடல் உள்ளுறுப்புக்களுக்கு சிறந்த ஓய்வினைக் கொடுத்தோம். அதனூடாக உடல்-உள ரீதியிலான நோய்களுக்கு நோன்பினை சிறந்த மருந்தாகவும் பெற்றுக்கொண்டோம். நன்மைகளை அதிகம் சம்பாதித்து, அல்லாஹ்விடத்திலான நெருக்கத்தைப் பெற்றவர்களாக இருக்கின்றோம். பர்ளான தொழுகைகளுடன் சுன்னத்தான தொழுகைகளையும் நிறைவேற்றும் வாய்ப்புக் கிட்டியது. நல்ல வார்த்தைகளையே பேசி, 'அல்குர்ஆனை' சிறந்த முறையில் பொருள் விளங்க ஓதி வந்ததால் 'அல்குர்ஆன்' பற்றிய சிறந்த விளக்கத்தினையும் இஸ்லாம் பற்றிய பூரண தெளிவினையும் எம்மால் பெற முடிந்தது. இஸ்லாத்தின்பால் நமது வாழ்க்கையை மேலும் சிறப்பாக வழிநடத்திக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. பணமும் பொருளும் எமது கைகளை விட்டுச் செல்வது தெரியாதளவுக்கு தர்மங்களை (ஸகாத், ஸதகா) வழங்கி, அல்லாஹ்வின் பரக்கத்தைப் பெற்றவர்களானோம். வருடத்தில் நாம் செய்யும் பாவகாரியங்களில் இருந்து மீண்டு, அதற்கான பாவமன்னிப்புத் தேடும் காலமாகவும் மன்னிப்பு வழங்கப்படும் காலமாகவும் எம்மை நாமே சுய விசாரணை செய்து கொள்வதற்கான பயிற்சிப் பட்டறையாகவும் அது திகழ்கின்றது. இந்த அத்தனை நற்பாக்கியங்களையும் நமக்குத் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.





எனினும், முஸ்லிம்களாகிய நாம் இவை அனைத்தையும் ரமழானுடன் இடைநிறுத்திக் கொள்ளலாகாது. ஏனெனில், ரமழான் நோன்பு காலமானது குறித்த காலவரையறைக்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல. எனவே, இதே எண்ணங்களைக் கருத்தில் கொண்டவர்களாய் பெருநாளை சந்தோஷமாக குடும்பத்துடனும் உற்றார், உறவினர்களுடனும் கொண்டாடி மகிழ்வோம். எம்மைப் போன்றே ஏழைகளும் பெருநாளை இன்பமாகக் கொண்டாடி மகிழ உதவி செய்வோம். அதிகாலையில் எழுந்து-குளித்து-புத்தாடைகளை அணிந்து கொள்வோம். பெருநாள் தொழுகைக்கு முன் காலை உணவை குடும்பத்தாருடன் உண்டு மகிழ்ந்து, தொழுகையை முடித்து, எமது பிரார்த்தனைகளில் ஏனையவர்களுக்கான பிரார்த்தனைகளையும் சேர்த்துக் கொள்வோம். எம்மை விட்டுப் பிரிந்து சென்ற உறவுகளின் கப்றுகளுக்குச் சென்று ஸலாம் கூறி, அவர்களுக்காகவும் அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம். ஏனையோருக்கும் ஸலாம் கூறி, பெருநாள் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வோம். எங்கள் வீடுகளில் தயாரிக்கப்பட்ட விசேட உணவுகளை அண்டை வீட்டாருக்கும் பகிர்ந்தளிப்போம். வீடுகளுக்கு வருபவர்களை அன்புடன் உபசரித்து மகிழ்ந்திடுவோம். நோயாளிகளின் நலம் விசாரிக்கச் சென்று, அவர்களுக்காகப் பிரார்த்திப்போம். உறவினர்கள், நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களுடனான உறவை மேலும் பட்டை தீட்டிக் கொள்வோம்.

இவையனைத்தையும் செவ்வனே நிறைவேற்றும்போது எமது வாழ்வு ஒளிமயமாக மாற்றம் பெறும். அல்லாஹ்வின் அருளும் பாதுகாப்பும் என்றுமே எம்மை வந்தடைந்த வண்ணமிருக்கும். அனைவருக்கும் இனிய பெருநாள் வாழ்த்துக்கள்.

- ஈத் முபாரக் -

-ஜீநு

விஜய
Vijey விஜய
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# சமாதானச் செய்தியுடன் தாய்லாந்து சிறுவர்கள்

**சமாதானச் செய்தியுடன் சுமார் 75 க்கு மேற்பட்ட சிறுவர்கள் தாய்லாந்திலிருந்து வருகை தந்துள்ளனர்.**



படப்பிடிப்பு: கயான் அமரசேகர

**'டொன் பொஸ்கோ' கிறிஸ்தவ சமூக நலசேவை அமைப்பு இவர்களை அழைத்து வந்துள்ளது. இந்த 'டொன் பொஸ்கோ' அமைப்பில் இன-மத வேறுபாடுகளின்றி பல்வேறு மக்களும் இணைந்துள்ளனர். தாய்லாந்து ஒரு பௌத்த நாடு என்பதால் இந்த அமைப்பில் உள்ள பெரும்பாலானவர்கள் பௌத்தர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**உலக சிறுவர் தினத்தையொட்டி இலங்கைக்கு சமாதான செய்தியுடன் வந்திருக்கும் இவர்கள், இங்கு நடத்த இருக்கும் நிகழ்வுகள் பற்றி விளக்கும் பத்திரிகையாளர் மாநாடொன்றை கடந்த வாரம் செவ்வாயன்று கொழும்பு 'ஹில்டன்' ஹோட்டலில் நடத்தினர். இம்மாநாட்டின்போது இவ்வமைப்பில் அங்கம் வகிக்கும் மற்றும் ஆதரவளிக்கும் கிறிஸ்தவ, பௌத்த மதகுருமார்களும் விளக்கமளித்தனர்.**

**இந்நாட்டில் யுத்தம், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாகவும் ஏராளமான சிறுவர்கள் பாதிக்கப்பட்டும் அநாதைகளாக்கப்பட்டும் உள்ளனர். இவர்களுக்கும் இன்னும் இவர்களைப் போல் உலகெங்கும் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுக்கும் நல்வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் 'டொன் பொஸ்கோ' அமைப்பின் நோக்கமாகும்.**

**எம்மிடம் இனம், மதம், மொழி, நாடு என்னும் வேறுபாடுகள் இல்லை. இந்த அமைப்பில் மதமாற்றம் என்ற பேச்சுக்கே இடமில்லை. சிறுவர்களை வாழ வைப்பதும் உலகெங்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதும்தான் எமது நோக்கம். சிறுவர்களுக்கு இசையில் மிகுந்த நாட்டமுண்டு. சிறுவர்கள் விரும்புவதையே விரும்ப வேண்டும் (Love what the children love). அதனால்தான் நாம் இந்த சமாதானச் செய்தியை இசைக்குழுவாகச் செயல்பட்டு, பல்வேறு இடங்களுக்கும் கொண்டு செல்கிறோம். இசையால் எதனையும் செய்ய முடியும். மதகுருமார் என்னும் வகையில் உலகுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்னும் மாபெரும் பொறுப்பு எமக்கு உள்ளது. இன்று உலகுக்கு சமாதானம் தேவை. இலங்கை மக்களின் கனவாக இருப்பது சமாதானமே. ஒற்றுமை இருந்தால் சமாதானம் ஏற்படும்.**




**மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, அதன் மூலம் உலகெங்கும் சமாதானத்தைக் கொண்டு வரும் நோக்கத்துடனேயே செயல்பட்டு வருகிறோம் என அந்நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய பலரும் கருத்துத் தெரிவித்தனர்.**

-ராஜா

EID MUBARAK

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்

* கிளாஸ் போகும் காலம் நேரம் மீதுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்

பாடநெறியில் இணையும் அணைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்

முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்

இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523,0817 918 981

மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணினிப் புரட்சி

உலக வரலாற்றில் மனிதன் பல்வேறு அறிவியல் புரட்சிகளை செய்துள்ளான். மனிதனின் அறிவியல் பரிணாம வளர்ச்சியின் பலனாக பல்வேறு அரிய படைப்புகளை அறிமுகப்படுத்தினான். அந்தவகையில் ஆரம்ப காலத்தில் தீயின் கண்டுபிடிப்பு பெருந்திருப்பு முனையானது. இவ்வாறே 'சக்கரத்தின் சுழற்சி' சமூக வாழ்க்கையை சற்றே புரட்டிப் போட்டது. நீராவியின் கண்டுபிடிப்பு தொழில்புரட்சிக்கு வித்திட்டது. மின்சாரத்தின் கண்டுபிடிப்பு அறிவியல் புரட்சிக்கு அடித்தளம் இட்டது. கணினியின் கண்டுபிடிப்போ மனிதகுல வரலாற்றில் ஒரு புதுயுகத்திற்கு (Information Era) பூபாளம் மீட்டியுள்ளது. இதனுடன் தகவல் யுகத்தின் தலைவாசலும் திறக்கப்பட்டுள்ளது.

கணினி எனும் தொழில்நுட்பத்தின் காலத்தை மீறிய வளர்ச்சி மனித வாழ்க்கைக்கு ஒரு புதிய விளக்கத்தை அளித்துள்ளது. மனித குலத்தின் இலட்சியங்களுக்கும் இலக்குகளுக்கும் புதிய எல்லைகளைக் காட்டியுள்ளது. 'இன்டர்நெட்' எனும் இணையத்தின் வரவு அன்றாட வாழ்க்கை நடைமுறைகளையே மாற்றிவிட்டது.

## தாளில்லா அலுவலகம்

பொதுவாக அலுவலகம் என்றவுடன் நம் மனக்கண் முன்னால் வருவது தாள்களும் தாள் கோப்புகளும் ஆவணக்கட்டுகளும் பெரிய பெரிய பேரேடுகளும்தான். மாறாக தாளில்லாத அலுவலகத்தை கற்பனை கூட செய்து பார்க்க முடியாத நிலை அன்று இருந்தது. ஆனால், இன்றோ பல்வேறு அலுவலகங்களில் கணினிகளும் சொல்செயலி, விரிதாள், தரவுத்தளம் ஆகிய மென்பொருட்கள் அடங்கிய அலுவலகப் பயன்பாட்டுக் கூட்டுத் தொகுப்பானது தாள்களையும் தாள் கோப்புகளையும் ஒழித்துக் கட்டியுள்ளன. அலுவலகத்தின் அனைத்துத் தகவல்களும் கணக்கு வழக்குகளும் பல இன்னோரன்ன விடயங்களையும் பெரிய பெரிய அலுமாரிகளில் தாள் கோப்புகளில் இருப்பதற்குப் பதிலாக மின்காந்த வட்டுக்களில், கோப்புறைகளில் (Folders) கணினிகளில் கோப்புகளாக சேமிக்கப்பட்டுள்ளன.

ஓர் அலுவலகத்தில் பல்வேறு பணிப் பிரிவுகளிலும் உள்ள கணினிகளும் மற்றும் மேலதிகாரியின் கணினிகளும் ஒரு கணினிப் பிணையத்தில் பிணைக்கப்பட்டிருக்கும். அலுவலகத் தகவல்கள் அனைத்தும் மையப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தில் சேமிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொருவருக்கும் ஒரு பயனர் பெயரும் (User Name) கடவுச் சொல்லும் (Password) வழங்கப்பட்டிருக்கும்.

அவற்றைப் பயன்படுத்தி அவரவர் தமக்குத் தேவையான கோப்புகளை அணுகமுடியும். ஒரு கோப்பினைக் கீழதிகாரி பார்த்த பிறகே மேலதிகாரி பார்ப்பார் என்கிற கட்டுப்பாடுகளையும் விதிக்க முடியும் கோப்புகளின் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை கணினித் தகவல் தொடர்புவழியாகவே தெரிவிக்க முடியும்.

எத்தனையோ பெரிய வங்கிகளின் கிளைகள் தாளில்லா அலுவலகங்களாக மாறிவிட்டன. காசோலைகள் (Cheques) கேட்டு வரைவோலைகள் (Demand Drafts) மட்டுமே தாள் வடிவில் கையாளப்படுகின்றன. இதில் முக்கிய விடயம் என்னவெனில் பணம் கொடுப்பவர். பணம் பெறுபவர் இருவருக்கும் இணைய வங்கிச் சேவை (Internet Banking) வசதி இருக்குமெனில் காசோலை, வரைவோலை எதுவும் தேவையில்லை. மின்னணுப் பணப் பரிமாற்றம் (Electronic Fund Transfer) மூலமே பணத்தை அனுப்பிட முடியும். பற்று அட்டை (Debit Card), கடன் அட்டை (Credit card) ஆகியவை பணம் என்கிற தாளையும் தேவையற்றதாக்கிவிட்டன. இதையெல்லாம் கணிப்பொறிப் பிணையங்களே சாத்தியமாகியுள்ளன. பல நாடுகளில் பெரிய புகையிரத நிலையங்களில் இந்தத் தகவல்களை கணினியே தருகின்றது. வரவிருக்கும் புகையிரதம் இப்பொழுது எந்த இடத்தில் வந்து கொண்டிருக்கின்றது எனத் துல்லியமாக கணினித் திரையில் தெரியும். பயணச்சீட்டு மற்றும் ஆசனம் பற்றிய விபரங்களைத் தொடுதிரை (Touch Screen) கணினியில் நாமே அறிந்து கொள்ளமுடியும். இப்பொழுதெல்லாம் ஆங்காங்கே உள்ள தன்னியக்க காசாளி இயந்திரத்தில் (ATM) பற்று அட்டையை பயன்படுத்தி பணம் எடுத்துக் கொள்கின்றோம். தாள்களும் சேமிப்புப் புத்தகமும் பேரேடுகளும் இல்லை. பணம் தரும், பதிவு செய்யும் அலுவலகர்களும் இல்லை. எனவே, ஆளில்லா அலுவலகம் அதாவது அலுவலர் இல்லா அலுவலகம் இன்று சாத்தியம் ஆகிவிட்டது.





## அலுவலகம் இல்லா அலுவலகம்

அலுவலகம் இல்லா அலுவலகமானது வீட்டிலிருந்தபடியே அலுவலக வேலையைச் செய்து கொள்வதை குறிக்கின்றது. உதாரணமாக ஒரு பெண் வீட்டில் வழக்கமாகச் செய்யும் சமையல் வேலைகளை செய்துகொண்டு குழந்தைகளையும் கவனித்துக் கொண்டு அவ்வப்போது இணையத்தில் இணைந்து கணினி முன் அமர்ந்து, உங்கள் அலுவலக வேலையை முடித்துவிடலாம். மாதந்தோறும் அதற்குரிய சம்பளம் கிடைத்துவிடும். உங்கள் வீடுதான் அலுவலகம். இதை ஓர் அலுவலகம் இல்லா அலுவலகம் என அழைக்கலாம் அல்லவா? இன்று மென்பொருள் துறையில் பலர் இதுபோலப் பணிபுரிகின்றனர். உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் உள்ள ஒரு நிறுவனத்திற்காக இலங்கையில் இருந்து கொண்டே பணியாற்ற முடியும்,

வங்கிக் கணக்கிலிருந்து பணப்பரிமாற்றங்களை இணையம் வழியாக வீட்டிலிருந்தபடியே செய்து கொள்ள முடிகிறது. தொலைபேசிக் கட்டணம், மின் கட்டணம், வீட்டு வரி போன்றவற்றை வீட்டிலிருந்தபடியே செலுத்தலாம். பஸ், புகையிரதம், விமானம் என்பனவற்றிற்கான போக்குவரத்து பயணச் சீட்டுகளை வீட்டிலிருந்தபடியே பதிவு செய்யலாம். வருமான வரிக்கணக்கை வீட்டிலிருந்தபடியே சமர்ப்பிக்கலாம். இவையெல்லாம் ஓர் அலுவலகத்தில் அலுவலர்கள் இருந்து செய்ய வேண்டிய வேலைதான். எனினும், அலுவலரும் இல்லாமல் அலுவலகமும் இல்லாமல் எல்லா வேலைகளும் கனகச்சிதமாய் நடந்து முடிந்து விடுகின்றன.

-இரஞ்சித் ஜெயகர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2008 இல் மேலும் விசாலமடைந்துள்ள ஓசோன் துவாரம்

கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டில் 'ஓசோன்' துவாரம் அளவில் விசாலமடைந்துள்ளதாக சர்வதேச காலநிலை அவதான நிலையம் தெரிவிக்கின்றது.

அந்தாட்டிக்காவின் மேற்பரப்பில் 'ஓசோன்' படலத்தில் துவாரம் ஏற்பட்டிருப்பது 1980 களில் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிலவும் காலநிலை மாற்றங்களைப் பொறுத்து இந்தத் துளையின் அளவிலும் மாற்றங்கள் ஏற்படுவதாக அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

'ஓசோன்' படலத்தில் ஏற்பட்டுள்ள இத்துளையினூடாக சூரியனிலிருந்து வெளியாகும் அபாயகரமான நச்சுக் கதிர்களான புற ஊதாக் கதிர்கள் நேரடியாகப் பூமியை வந்தடையும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இந்த நிலை 2075 ஆம் ஆண்டளவில் ஓரளவு சீரடையும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து சர்வதேச காலநிலை அவதான நிலையத்தின் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், ''இத்துளை 1980 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலையை அடைவதற்குப் பல தசாப்தங்கள் எடுக்கலாம். அதனால், நாம் 2075 ஆம் ஆண்டினை அவதானத்துடன் எதிர்பார்த்திருக்கின்றோம்'' என்று குறிப்பிட்டார்.




அத்துடன், இவ்வாண்டின் 'ஓசோன்' துளையின் விசாலத்தன்மையை இதுவரை சரிவரக் கணக்கிட்டுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 2007 ஆம் ஆண்டு செப்டெம்பர் வரை 'ஓசோன்' துளையானது சுமார் 27 மில்லியன் சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு வரை பரந்துள்ளதாகவும் அதுவரையில் 'ஓசோன்' துளையின் ஆகக் கூடிய விசாலத்தன்மை 25 மில்லியன் சதுர கிலோமீற்றராகவே இருந்ததாகவும் சர்வதேச காலநிலை அவதான நிலையம் சுட்டிக் காட்டியுள்ளது.

மனிதனால் ஏற்படுத்தப்படுகின்ற சூழல் மாசுபடுத்தும் நடவடிக்கைகளினால் வளிமண்டலத்தில் காபன்டயொக்சைட்,குளோரோ ஃப்ளோரோ காபன் என்பனவற்றின் சதவீதம் அதிகரித்து, இந்த 'ஓசோன்' படலத்தில் துளை ஏற்பட வழிவகுக்கின்றன. இந்த துளையினூடாக புவியை வந்தடையும் புற ஊதாக் கதிர்களினால் சருமப் புற்றுநோய் ஏற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆய்வுக்கு உட்படுத்தப்படும் செவ்வாய் மண் மாதிரி



செவ்வாயில் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கும் நாஸாவின் 'பீனிக்ஸ்' ஆய்வு ஓடம் அங்கு பல்வேறு ஆய்வு நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதோடு அது குறித்த புகைப்படங்களையும் தரவுகளையும் நாஸாவுக்கு தொடர்ந்து அனுப்பிய வண்ணம் உள்ளது.



'பீனிக்ஸ்' ஆய்வோடமானது கடந்த மார்ச் 25 ஆம் திகதி 'ரொபோ' கைகளை பயன்படுத்தி செவ்வாயின் மேற்பரப்பில் அகழ்தலை மேற்கொண்டது. இந்த அகழ்தலின் போது செவ்வாயில் பனிக்கட்டிகள் காணப்படுவதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனைப் பரிசோதனை செய்து பார்த்ததன் பின்னர் செவ்வாயில் நீர் இருப்பதற்கான ஆதாரத்தை உத்தியோகபூர்வமாக 'நாஸா' வெளியிட்டது.

இதனை அடுத்து செவ்வாயின் மண் மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இந்த மண் மாதிரியில் சில வகை உப்புக்கள், சோடியம், மெக்னீசியம், குளோரைட், பொட்டாசியம் ஆகிய இரசாயனங்கள் கலந்துள்ளதாக அதன் முதற்கட்ட ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

நாஸாவுக்காக 'அரிசோனா' பல்கலைக்கழகத்தினால் இந்த 'பீனிக்ஸ்' ஆய்வு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இயலுமானவரை அதிக மண் மாதிரிகளை சேகரித்து, ஆய்வுகளை முன்னெடுக்க 'பீனிக்ஸ்' தயாராக இருப்பதாக 'நாஸா' நம்பிக்கை வெளியிட்டுள்ளதோடு 'பீனிக்ஸ்' செயற்றிட்டக்குழு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.




# விண்வெளியில் திருமணம்





**ஜப்பானிய விண்வெளி சுற்றுப்பயண ஏற்பாட்டு நிறுவனமான Rocketplane Kistler விண்வெளியில் திருமணத்தை நடத்தி வைப்பதற்கான ஏற்பாடுகளை மும்முரமாக மேற்கொண்டு வருகின்றது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென்றே First Advantage என்ற பெயரில் ஒரு குழுவையும் அந்நிறுவனம் நியமித்துள்ளது.**

**விண்வெளியில் தமது திருமணத்தை நடத்த விரும்பும் ஜோடிகளிடம் இருந்து 240 மில்லியன் யென் (2.2 மில்லியன் டொலர்) கட்டணமாக அறவிடப்படவுள்ளது. திருமண வரவேற்பு, மணமக்களின் உடைகள், போக்குவரத்துச் செலவு, விண்வெளி சென்று திரும்புவதற்கான 4 நாள் கட்டணம், புகைப்பட எல்பம், திருமண அத்தாட்சிப் பத்திரம் உள்ளிட்ட அனைத்து திருமண நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக இந்தக் கட்டணம் அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**

**பூமியிலிருந்து (புவியீர்ப்பு விசை அற்ற) சுமார் 100 கிலோமீற்றர் மேல்நோக்கி விண்வெளி விமானத்தில் அழைத்துச் செல்லப்பட்டே மேற்படி திருமணம் நடத்தி வைக்கப்படும் எனவும் இது ஒரு மணித்தியாலப் பயணமாக அமையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இப்பயணத்தின்போது குறித்த திருமண ஜோடியுடன் அவர்களின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் இருவரையும் உடன் அழைத்துச் செல்லலாம். விண்வெளியில் நடைபெறும் திருமணம் நேரடி ஒளிபரப்பு செய்யப்படவும் உள்ளது. இந்த செயற்றிட்டம் 2011 ஆம் ஆண்டளவில் அமுலுக்கு வரவுள்ளது. எனினும், இதற்கான விண்ணப்பங்கள் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன.**

# சூரியனை ஒத்த நட்சத்திரத்திற்கு அருகில் மாதிரிக்கோள் கண்டுபிடிப்பு

'டொரொண்டோ' பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த மூன்று வானியல் ஆராய்ச்சியாளர்கள் ஹவாய் தீவின் 'மௌனா கீ' தீவில் இருந்து 'ஜெமினி நோர்த்' தொலைக்காட்டியைப் பயன்படுத்தி, புவியிலிருந்து சுமார் 500 ஒளியாண்டுகளுக்கு அப்பால் அமைந்துள்ள சிறிய நட்சத்திரத்தையும் அதன் சக நட்சத்திரங்களையும் படம் பிடிக்கும்போது



அவற்றுக்கருகில் மாதிரிக்கோள் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

மாதிரிக்கோள் ஒன்றை நேரடியாக அவதானிப்பதற்கான வாய்ப்பும் கண்டுபிடிக்கப்பட்டதும் இதுவே முதல் சந்தர்ப்பம் என்று ஆய்வாளர்களில் ஒருவரான டேவிட் லெஃப்ரெனிக்கர் தெரிவிக்கின்றார். இந்த மாதிரிக்கோள் ஏலவே கண்டுபிடிக்கப்பட்ட சிறிய நட்சத்திரத்தின் ஈர்ப்பு விசையுடன் தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்படும் நிலையில், அது குறித்த ஆய்வுகளை முன்னெடுப்பதற்குப் பெரும் துணையாக அமையும் என்று அவர் மேலும் கூறினார். இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள மாதிரிக்கோள்கள் பிரபஞ்சத்தில் மிதந்து காணப்பட்டனவாக இருந்தபோதும் நட்சத்திரத்துக்கு அருகிலான ஒரு மாதிரிக்கோள் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல்தடவையாகும்.

EID MUBARAK

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி

இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.

BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH

அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

60 நாட்களில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்

FREE FREE இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும்

* இலவச 30 days Easy Way English Book Part1

Easy Way English

இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்

பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகாய ...


நவீன விமானம்

வான்வெளியில் பறக்க மனிதன் எத்தனித்தது எப்பொழுது? என்றொரு வினா எழுப்பினால் அதற்கான சரியான பதிலை எவராலும் கூறமுடியாது. மனிதனின் மனதில் வானில் பறக்க வேண்டும் என்ற ஆசை ஆரம்ப காலத்தில் தோன்றியிருக்கலாம். அதற்கான சிறு சிறு முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கலாம். ஆனால், அது குறித்து எந்த சான்றுகளும் தகவல்களும் கிடையாது. எனினும், அது குறித்து விபரிக்கும் அல்லது விமானப் பயணங்கள் பற்றிய சில இலக்கியங்களில், காவியங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய இலக்கியங்களில் இராமாயண காவியம் உன்னத இடத்தில் உள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி இலங்கை வேந்தன் இராவணனிடம் புஷ்பக விமானம் ஒன்றிருந்ததாகவும் அதன் மூலமே இராவணன் சீதையை இந்தியாவில் இருந்து கடத்திக்கொண்டு இலங்கைக்கு வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றை வெறும் கட்டுக்கதை என்றோ, கற்பனை வளம் என்றோ, இலக்கிய வர்ணனை என்றோ நிராகரிக்க முடியுமா? இராவணனின் இராச்சியத்தை உறுதிப்படுத்தும் முக்கிய மூன்று சான்றுகள் இருப்பதாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அவற்றில் இந்த 'புஷ்பக' விமானமும் ஒன்றாகும்.


எனினும், இக்காவியத்தை கற்பனைதான் என எடுத்துக் கொண்டாலும் இதனை எழுதிய படைப்பாளிக்கு விமானம் எனும் எண்ணக்கரு தோன்றியது எவ்வாறு?

இதனைத்தவிர, விஷ்ணுவர்மன் எனும் இலக்கியப் படைப்பாளியும் தனது இலக்கிய நூலில் வான் பயணம் குறித்து குறிப்பிட்டுள்ளார். விமானத்தில் சென்று இளவரசியைச் சந்தித்ததாகவும் அந்தக் காவியத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்த வகையில் புராதன இலக்கியங்களில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டாலும் ரைட் சகோதரர்களே விமானத்தை முதன்முதலாக வடிவமைத்துப் பறக்கவிட்டனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது. டெரல் கொலின்ஸ் எனும் அமெரிக்க நிபுணர் 'ரைட் சகோதரர்களுக்கு முன் விமானம் தொடர்பாக எவரும் எந்தவொரு விடயத்தையும் அறிந்து வைத்திருக்கவில்லை'' என குறிப்பிடுகின்றார். ரைட் சகோதரர்களுக்கு விமானம் சம்பந்தமான எண்ணம் தோன்றியதும் ஒரு சுவையான கதைதான்.

கிரேக்க புராணக் கட்டுக்கதை ஒன்றை வாசித்த ஓவல் ரைட் மற்றும் வில்பர் ரைட் ஆகிய சகோதரர் இருவருக்கும் அக்கதையின் பாத்திரங்களும் அதில் நடக்கும் புதுமையான விடயங்களும் மனதைக் கொள்ளை கொண்டன. சிறையிடப்பட்ட தந்தையும் தமையனும் சிறகுகள் முளைத்து வண்ணத்துப் பூச்சி போல் பறந்து சென்றது போல் எழுதப்பட்ட கிரேக்க புராணக்கட்டுக்கதைதான் அது.

இக்கதையைக் கேள்வியுற்ற ரைட் சகோதரர்களின் நண்பர்களும் வானில் பறக்கமுடியுமா? என எண்ணத் தொடங்கினர். இப்படி இருக்கையில் ஒருநாள் வானில் அசைந்தாடிக் கொண்டிருந்த பட்டம் நூல் அறுந்த பின்பும் தொடர்ந்து அசைந்தாடிச் செல்வதை அவதானித்தனர் ரைட் சகோதரர்கள். இதனைக் கண்ணுற்ற அவர்களின் வானில் பறக்கும் எண்ணத்திற்கு இது மேலும் உரம் சேர்த்தது.

ஆனால், இந்த எண்ணங்கள் எதிர்காலத்தில் உலகில் மிகச் சிறந்த, விரைவான, உன்னதமான போக்குவரத்துச் சாதனமொன்றை உருவாக்கும் என கனவில் கூட எவரும் நினைக்கவில்லை.


முயற்சி தோல்வியுற்ற விமானம்


முதலாவது விமானம்

## ரைட்சகோதரர்களின் குடும்பம்





மில்டன்-சுசான் தம்பதிகளுக்கு இரண்டு பிள்ளைகள். ஒருவர் வில்பர் மற்றவர் ஓவில். இதில் வில்பர் ரைட் அண்ணன். ஓவில் ரைட் தம்பி. தந்தை மில்டன் ரைட் ஒரு கிறிஸ்தவ ஆயராவார். (Bishop) அதனால், எந்நேரமும் மதக் கடமைகளுக்காக வீட்டுக்கு வெளியே தூர இடங்களில் வாழ வேண்டி இருந்தது. எனினும், அவர் அடிக்கடி வீட்டுக்குத் தவறாமல் கடிதம் எழுதினார். அவர் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு முறையும் அவர் ஏதாவதொரு பரிசுப் பொருளை கொண்டு வரத் தவறுவதில்லை. தனது பிள்ளைகளின் அறிவுக்கு இந்தச் சிறு பரிசுப்பொருள்கள் ஏதோ ஒருவகையில் உதவியாக இருக்குமென அவர் நினைத்தார்.

இவ்வாறு தந்தை மில்டன் ரைட், பிள்ளைகளுக்கு பரிசுப் பொருட்கள் கொடுத்து வருகையில் 1878 இல் அவர் 'இறப்பர் பேண்ட்' களால் இயங்கும் ஹெலிகொப்டர் போன்ற ஒன்றை பிள்ளைகளுக்கு வழங்க பரிசுப்பொருளாக எடுத்து வந்தார். இதனைப் பார்த்து மகிழ்ந்த ஓவலும் வில்பரும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி அதே போன்றதொரு விளையாட்டுப் பொருளை உருவாக்கினர்.

1884 இல் பிஷப் மில்டன் குடும்பத்தினர் தமது வசிப்பிடத்தை மாற்றினர். டைட்டன் எனுமிடமே புதிதாக குடியேறிய இடமாகும். இந்தப் புதிய இடத்தில் புதிய சூழலுக்குச் சென்ற சிறிது காலத்தில் தாயார் கடும் காசநோய்க்கு உட்பட்டு படுக்கையில் விழுந்து உயிர்


பரீட்சார்த்தத்தின்போது விழுந்து நொருங்கிய விமானம்.


1902 இல் இறக்கைச் சிறகு பரீட்சை


1916 விமானத்தின் மாதிரி வடிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை புரிந்த சகோதரர்கள்



துறந்தார். அந்தத் துயரமான நிகழ்வுடன் தனது கல்விக்கு முழுக்குப் போட்டு அச்சகமொன்றை ஆரம்பித்தார் வில்பர். அவ்வேளை, சகோதரர் ஓவலுக்கும் பள்ளிப்படிப்பு பாகற்காய் போல் கசக்க ஆரம்பித்தது. அதனால், அவரும் அச்சகத்தில் இணைந்தார். அவர்களின் அச்சுத்தொழில் மிகவும் வெற்றிகரமா நடைபெற்றுக் கொண்டிருந்தது. 1890 இல் ''த வெஸ்ட் சைட் நியூஸ்'' (The West Side News) எனும் வாரப்பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தனர். அச்செய்திப் பத்திரிகை வெற்றிகரமாக விற்பனையாகியது. அந்த ஊக்கத்தில் அவர்கள் தினசரி நாளேடு ஒன்றை ஆரம்பித்தனர். ஆனால், சிறிது காலத்தில் அது நட்டமடைந்து முயற்சி தோல்வி அடைந்தது. அதனால், பத்திரிகை தொழிலை கைவிட்டு மீண்டும் அச்சுத் தொழிலுக்குத் திரும்பினர்.

## துவிச்சக்கர வண்டி

அக்காலத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் இள வயதினரை சைக்கிள் (துவிச்சக்கர வண்டி) பித்துப் பிடித்திருந்தது. இந்த சைக்கிள் பித்து ரைட் சகோதரர்களையும் விட்டு வைக்கவில்லை. அச்சக வேலைகளுடன் மேலதிகமாக சகோதரர்கள் இருவரும் சைக்கிளை பழுது பார்ப்பதிலும் விற்பனை செய்வதிலும் ஈடுபட்டு புதுத் தொழில் ஒன்றை ஆரம்பித்தனர். சிறிது சிறிதாக அச்சுத் தொழிலை கைவிட்டு சைக்கிள் கைத்தொழில் பக்கம் தமது முழுக் கவனத்தையும் செலுத்தினர்.


1896 இல் அவர்கள் புதிதாக வடிவமைக்கப்பட்ட சைக்கிள் ஒன்றை அறிமுகப்படுத்தினர். அன்று முதல் ரைட் சைக்கிள் நிறுவனம் பேரும் புகழும் அடைந்தது. அப்போது சைக்கிள் சக்கரம் குறித்து தீவிரமாய் செயல்படுகையில் அதே சக்கரத்தை வானில் பயணிக்க ஏதும் செய்ய முடியுமா என தொடர்ந்து முயற்சித்தனர்.

பல்வேறு தொழில்களைச் செய்து பணம் சம்பாதித்த ரைட் சகோதரர்கள் வானில் பறக்கும் சாதனத்தை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தை மட்டும் கைவிடவில்லை.

## விமானத்தைக் கண்டுபிடித்தல்

இச்சமயத்தில் குறிப்பாக 1896 ஆம் ஆண்டில் பலர் விமானத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஜேர்மனியில் ஓர் ஆய்வாளர் 'கிளைடரில்' பறந்தார். 'கிளைடர்' என்றால் இயந்திரத்தின் உதவியின்றி மிக உயரத்தில் இருந்து காற்றின் உந்துசக்தி மூலம் பறக்கும் ஒரு சிறிய வாகனமாகும்.

இதனைக் கேள்வியுற்ற ரைட் சகோதரர்கள் கிளைடரைப் பற்றிய பல உண்மையான தகவல்களை அறிந்து கொண்டார்கள். கான்யூட், லாவ்லி போன்ற அறிவியலாளர்களின் ஆய்வுக்கட்டுரைகளை தொடர்ந்து படித்தார்கள்.



இறுதியில் ஒருவாறாக விமானமொன்றை உருவாக்கி முடித்தனர். பின்னர் அதனை அத்திலாந்திக் சமுத்திர கரையோரத்திற்கு எடுத்துச் சென்று பறக்க விட முயற்சித்தனர். அவர்களின் முயற்சி கைகூடவில்லை. எனினும், அவர்கள் சோர்ந்துவிடவில்லை. தமது முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து தமது இலக்கு நோக்கிப் பயணித்தனர். தாம் தயாரித்த விமானத்திலிருந்த குறைபாடுகளை ஒவ்வொன்றாக அவதானித்து மீண்டும் முன்னரிலும் பார்க்க சிறந்ததொரு விமானத்தை தயார் செய்தனர்.

சார்ளி டேலர் என்பவரின் உதவியுடன் பெற்றோலில் இயங்கும் இயந்திரமொன்றை தமது விமானத்திற்குப் பொருத்துவதில் ரைட் சகோதரர்கள் வெற்றி கண்டனர். அதன்பின்பும் விமானத்தைப் பறக்கவிடும் முயற்சியில் இருமுறை தோல்வி கண்டனர். அவர்கள் மனந்தளராது தமது முயற்சியை கைவிடாது தொடர்ந்து செயல்பட்டதன் விளைவாக 1903 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி முதன்முதலாக தமது விமானத்தைப் பறக்க வைப்பதில் வெற்றி கண்டனர்.

## முதலாவது விமானப் பயணக்காட்சி

முதலாவது விமானம் ஒரு நிமிடத்திற்கும் குறைவான நேரமே வானில் பறந்தது. பின் தரையில் விழுந்து நொருங்கியது. முதலாவது விமானம் பறந்த கையோடு அதனை விடச் சிறந்த இயந்திரமும் இரண்டு ஆசனங்களும் கொண்ட விமானமொன்றை நிர்மாணிப்பதில் ரைட் சகோதரர்கள் தமது கவனத்தைத் திருப்பினர். அதற்கு பிரான்ஸிய மற்றும் அமெரிக்க இராணுவத்தினரின் உதவியும் கிடைத்தது. 1908 ஆம் ஆண்டு மக்களின் முன்னிலையில் முதலாவது விமானப் பறப்பு நிகழ்த்தப்பட்டது. இதனால், ஏற்பட்ட புகழின் காரணமாக 'ரைட் விமான நிறுவனம்' அமைக்கப்பட்டது.

இவ்வகை விமானங்களை தயாரிப்பதற்கு பெருந்தொகைப் பணம் செலவழிப்பது உகந்ததல்ல என்பது பலரின் கருத்தாகவும் இருந்தது. அந்த விமானங்களில் பயணித்த விமானிகள் சிலர் உயிரிழந்ததைத் தொடர்ந்து ரைட் விமான நிறுவனத்தின் புகழ் மறையத் தொடங்கியதும் குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் நாட்டின் உயர்ந்த விருதான Legion of Honour எனும் விருதினை வில்பருக்கு கொடுக்க முன்வந்தது பிரான்ஸ். ஆனால், இருவருக்கும் அந்த விருது அளிக்கப்பட வேண்டும் என்றும் இல்லை என்றால் அந்த விருது வேண்டாம் என்றும் வில்பர் மறுத்துவிட்டார். இதன் பின்னரே பிரான்ஸ் அரசானது இருவருக்கும் அந்த விருதினை அளிக்க முன்வந்தது.

காலப்போக்கில் தைபோயிற்று காய்ச்சலால் பீடிக்கப்பட்ட வில்பர் 1912 இல் மிகக் குறைந்த வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். ஒரு சில வருடங்களில் அதாவது 1916 இல் ஓவல் தமது விமான நிறுவனத்தை விற்றுவிட்டார். ரைட் சகோதரர்களின் நீண்டகால முயற்சி அத்துடன் நிறைவு பெறவில்லை. பல்வேறு ஆய்வாளர்கள் அது குறித்துப் பரிசோதனைகளை செய்தனர். அத்தொடர் பரிசோதனைகளும் ஆய்வுகளும் வீண் போகவில்லை. அந்த அயராத முயற்சிகளின் பெறுபேறாக நவீன விமானங்கள் தோன்றின. இன்று உலகில் மிக விரைவாகப் பயணிக்கக் கூடிய சாதனமாக இந்த விமானம் உருவெடுத்துள்ளது.

**-இரஞ்சித் ஜெயகர்**



சிறுவயதில் வில்பர் ரைட் (1876)





ரைட் சகோதரர்களின் செய்திப் பத்திரிகை



ரைட் சகோதரர்களின் நிறுவனம்



ரைட் சகோதரர்களின் இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயைத் தடுப்போம்




**காலத்துக்குக் காலம் பல்வேறு கொடிய நோய்கள் எம்மை அச்சுறுத்தி வருகின்றன. இவற்றுக்குப் பலியாகும் உயிர்களும் ஏராளம். அந்தவகையில் எம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொடிய நோய்களில் ஒன்றுதான் டெங்குக் காய்ச்சல். வருடத்தின் எக்காலத்திலும் பரவக்கூடிய ஒரு நோயாக இது இருந்தாலும் கூட பெரும்பாலும் மழைகாலம் தணிந்ததையடுத்தே இதன் தீவிரம் தலைதூக்குகிறது.**

## வைரஸ் நோய்

'ஆபோ' எனும் வைரஸ் குடும்பத்தின் 'ஃப்லேவி' என்ற வைரஸினால் டெங்கு நோய் பரவுகின்றது. இந்த வைரஸ் 1,2,3,4 என்று நான்கு வகைப்படும். இதில் ஒரு வகை வைரஸினால் நோய் வாய்ப்படும் ஒருவர் மற்ற வைரஸ் வகைகளினாலும் பாதிக்கப்பட வாய்ப்புகள் உண்டு.

## நோய்க்காவிகள்

டெங்கு நோயானது 'ஈடிஸ் ஈஜிப்டை' மற்றும் 'ஈடிஸ் எல்போபிக்ட்டஸ்' ஆகிய நுளம்பு வகைகளினாலேயே பரப்பப்படுகின்றது. 'ஈடிஸ் ஈஜிப்டை' வகை நுளம்புகளின் உடலில் மற்றும் கால் பகுதிகளில் வெள்ளைப் புள்ளிகளையும் கோடுகளையும் காணமுடியும். மற்றைய வகை நுளம்பின் தோள் பகுதியில் வெள்ளை நிறத்திலான அரிவாள் போன்ற இரு கோடுகள் இருக்கும்.




## டெங்குக் காய்ச்சல்

உடலினுள் டெங்கு வைரஸ்கள் சென்று, 5-6 நாட்களின் பின்னரே நோய்க்கான அறிகுறிகள் தென்படும். சிலவேளைகளில் நோய்க்கான அறிகுறிகள் தென்பட 5-15 நாட்களும் எடுக்கும். டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டால் அதிக காய்ச்சல், உடல் வேதனை, மூட்டு மற்றும் தசைகளில் வலி, தொண்டைப் பகுதியில் அடைத்துக் கொள்வது போன்ற தன்மை, கண்களின் கீழ்ப்பாகத்தில் வலி, தலைவலி, வயிற்றுவலி,வாந்தி, உடலில் சிவப்புக் கொப்புளங்கள் ஏற்படல் போன்ற அறிகுறிகள்தென்படும். எனினும், சிலருக்கு டெங்கு நோய் ஏற்பட்ட போதும் இவ்வாறான அறிகுறிகள் எதுவும் தென்படாமலும் இருக்கும். இன்னும் சிலருக்கு அது சாதாரண காய்ச்சல் போன்றும் இருக்கும்.

## தீவிர நிலை

டெங்குக் காய்ச்சல் தீவிரமடையும் போது மூக்கு, கண், காதுப் பகுதிகள் மற்றும் பல் முரசுகளில் இருந்து இரத்தம் வெளியேறலாம். அத்துடன், இரத்த வாந்தி, மலத்துடன் இரத்தம் வெளியேறல், சிறுநீருடன் இரத்தம் வெளியேறல் போன்ற நிலைமைகளும் ஏற்படும். இது டெங்கு நோயின் ஆபத்தான கட்டமாகும்.

## தீவிர நிலையின்போது ஏற்படும் அதிர்ச்சி

டெங்குக் காய்ச்சல் தீவிரமடைந்து, அது ஆபத்தான கட்டத்தை அடையும் நிலையில் நோயாளி அதிர்ச்சி நிலைக்குள்ளாவார். காய்ச்சல் குறைந்து விட்டது போன்று தோன்றினாலும் நோயினால் ஏற்படும் பாதிப்புகளில் மாற்றம் இருக்காது. உடல் வெளிறிப் போதல், வியர்த்தல், நாடித்துடிப்பு அதிகரிப்பு, உடல் நீல நிறமாதல் போன்ற அறிகுறிகளும் ஏற்படலாம். இவ்வாறான நிலையில் தேவையான சிகிச்சை எடுக்காவிடின் நோயாளி இறந்துவிடவும் நேரிடும்.

## சிகிச்சை

டெங்கு நோயைத் தடுப்பதற்கான தடுப்பூசியோ அல்லது அந்த வைரஸுக்கு எதிராகச் செயற்படக்கூடிய மருந்துகளோ இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால், நோயைக் கட்டுப்படுத்துவதற்கான சிகிச்சைகளை மட்டுமே வழங்கலாம்.

## நுளம்பு பெருகும் இடங்களும் கட்டுப்படுத்தலும்

நீர் அல்லது மழைநீர் தேங்கி நிற்கும் வெற்றுப் போத்தல்கள், பாத்திரங்கள், டயர், தேங்காய் சிரட்டைகள், யோகட் கோப்பைகள், வெற்று இளநீர் குடுவைகள் மற்றும் வீட்டினுள் நீர் நிரப்பி வைக்கப்படும் பூச்சாடி என்பனவற்றிலேயே டெங்கு நுளம்புகள் பெருகுகின்றன.

ஆகவே, டெங்கு நோயைப் பரப்பக் கூடிய நுளம்புகளின் பெருக்கத்துக்கு ஏதுவான மேற்படி இடங்களை அகற்றி, சுத்தப்படுத்துவதன் ஊடாக நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். எம்மை அந்த வைரஸ் தாக்காமல் காத்துக் கொள்ளலாம்.

## டெங்கு நோய் பரவும் காலப்பகுதி

வருடம் முழுவதும் டெங்கு நோயாளிகள் பற்றிய தகவல்கள் வெளியானாலும் பெரும்பாலும் மழைக்காலத்தினை அடுத்தே டெங்கு நோய் தீவிரமாகப் பரவுவதை அவதானிக்க முடியும். ஜூன், ஜூலை மற்றும் நொவெம்பர், டிசம்பர் காலப்பகுதிகளைக் குறிப்பாகச் சொல்லலாம்.

## செயற்படும் காலம்

டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் காலை 7 மணி முதல் 10 மணி வரையும் மாலை 3 மணி முதல் 5 மணி வரையான காலப் பகுதியிலேயே சுறுசுறுப்பாக இயங்குகின்றன.

**டெங்கு ஏற்பட்டவுடன் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை:**

* ஓய்வாக இருத்தல்.
* காய்ச்சலின்போது உடனே பெரசிட்டமோல் மருந்தை எடுத்தல்.
* அஸ்பிரின் அடங்கிய மருந்துகளை உட்கொள்ளாதிருத்தல்.
* நீராகாரம் அதிகம் அருந்துதல்.
* டெங்கு தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் ஜீவனி அருந்தக் கொடுத்தல்.

**டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான மேலும் சில வழிமுறைகள்:**

* குப்பைகளை எரித்து, சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.
* இளநீர் குடுவைகளை வெட்டி அவற்றில் நீர் தேங்காமல் அகற்றுதல்.
* பாவனைக்கு உதவாத வெற்றுப்பேணி, பாத்திரங்களை உரிய முறையில் அகற்றி விடுதல். எரித்துவிடல் அல்லது புதைத்துவிடல்.
* டயர்களில் மண் நிரப்பி வைத்தல்.
* கூரைகளில் மழைநீர் தேங்கும் வடிகால்களை சுத்தப்படுத்தல்.
* பூச்சாடிகளில் உப்புக்கட்டிகளை இடல். நீரை அடிக்கடி மாற்றுதல். சுத்தப்படுத்தல்.
* வீடுகளில் ஜன்னல்களை மாலையில் மூடிவிடல்.
* வீடுகளைச் சுற்றியுள்ள கான்களை சுத்தப்படுத்தல், அவற்றில் நீர் தேங்காமல் வடிந்தோடுவதற்காக வழியமைத்தல்.






மழைநீர் தேங்கியிருக்கக் கூடிய வெற்றுப் பேணிகள், போமிலியா செடி மற்றும் டயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதலாவது விஞ்ஞானி
# இம்ஹொடெப்





இம்ஹொடெப்பினால் நிர்மாணிக்கப்பட்ட படி பிரமிட்.

உலகின் முதலாவது விஞ்ஞானியாகக் கருதப்படும் இம்ஹொடெப்பின் சிலை ஒன்று.

**இம்ஹொடெப் கி.மு 2980-2950 க்கும் இடைப்பட்ட காலத்தில் மாபெரும் நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒருவராகத் திகழ்ந்ததாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளார். உலகில் விஞ்ஞானிகளாக அடையாளம் காணப்பட்டவர்களில் முதலாவது விஞ்ஞானியாக இம்ஹொடெப்பைக் குறிப்பிடலாம்.**

இன்றைய உலகம் விஞ்ஞான-தொழில்நுட்ப ரீதியில் பல புதுமைகளைச் செய்து விந்தைமிகு உலகை உருவாக்கியுள்ளது. இன்று எங்கும் எதிலும் விஞ்ஞானம் தனது பங்களிப்பைச் செய்து அற்புதமாக உலகை முன்னேற்றியுள்ளது. இதற்கு காரணமாக இருப்பவர்கள் விஞ்ஞானிகளே. இந்த விஞ்ஞானிகளுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்த ஒருவர் இருந்தார்.

இற்றைக்கு 4950 வருடங்களுக்கு முன் எகிப்து நாட்டில் அற்புதமான மனிதர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவரை மையமாக வைத்துக் கூறப்படும் கதைகளோ ஆச்சரியம் தருபவை. அவருக்கு நோய்களைக் சுகமாக்கும் அற்புதத் திறமைகள் இருந்தன. அதனால், உலகில் இது வரை கிடைக்கப்பட்ட தகவல்களின்படி உலகின் முதலாவது வைத்தியரும் இவர்தான். மாயாஜால வித்தைகள் புரியும் திறனும் அவருக்கு இருந்தது. அக்கால மக்களுக்கு அவர் மீது ஒருவித மரியாதை கலந்த பயம் இருந்தது. அவரின் மரணத்தின் பின்னும் நோயாளிகள் அவரின் கல்லறைக் கருகில் சென்று சுகமடைந்ததாக கூறப்படுகின்றது. இன்றைய தகவல்களின் படி உலகின் முதலாவது விஞ்ஞானியும் இவரே. அவர்தான் இம்ஹொடெப்.

## யார் இந்த இம்ஹொடெப்

எகிப்து நாட்டின் பண்டிதரான இம்ஹொடெப் மெம்பிஸ் நகருக்கு அருகில் பிறந்தார். இவர் கி.மு 2980-2950 க்கும் இடைப்பட்ட காலத்தில் மாபெரும் நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒருவராகத் திகழ்ந்ததாக வரலாற்றில் இடம் பெற்றுள்ளார். நாம் அறிந்த வகையில் உலகில் விஞ்ஞானிகளாக அடையாளம் காணப்பட்டவர்களில் முதலாவது விஞ்ஞானியாக இம்ஹொடெப்பை குறிப்பிடலாம். அவரின் பின் விஞ்ஞானி ஒருவர் சுமார் 2000 வருடங்களாக உலகில் தோன்றவில்லை.

## அற்புதப் படைப்பான படி பிரமிட்

'படி பிரமிட்' எனும் அற்புதமான படைப்பை இம்ஹொடெப் தான் நிர்மாணித்தார். இந்த படி பிரமிட் (Step Pyramid) குறித்து உறுதியான சான்றுகளை வரலாற்றாசிரியர்களும் தொல்பொருள் நிபுணர்களும் கண்டுபிடித்துள்ளனர். எகிப்தில் பண்டைய வரலாற்றுப் புகழ் மிகு தொல்பொருள் அழிவுகளுக்கு இடையில் உள்ள இந்தப் படி பிரமிட்டானது எகிப்திய பிரமிட்டுகளில் மிகவும் பழைமையானது எனக் கருதுகின்றனர். தொல்பொருள் நிபுணர்களின் கருத்துப்படி இந்தப் பிரமிட்டை நிர்மாணித்தவர் இம்ஹொடெப் தான் என்றால் உலக வரலாற்றில் அத்தகைய அற்புதப் படைப்பை உருவாக்கிய முதலாவது மனிதனாக இம்ஹொடெப் திகழ்கின்றார்.

## இம்ஹொடெப்பின் கல்லறை

இம்ஹொடெப் இறந்த பின் அவரது பூதவுடல் எகிப்தில் ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. இம்ஹெடெப்பின் கல்லறையானது மக்களின் நோய் தீர்க்கும் தேவாலயமாக எகிப்திய மக்களால் கருதப்பட்டது. அவர் இறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் வரை தொடர்ந்தும் மக்கள் திரண்டு வந்த வண்ணம் இருந்தனர். மக்கள் அவரின் கல்லறையை வணக்கஸ்தலமாக மாற்றினர். அவர்கள் கல்லறையில் வழிபாட்டில் ஈடுபடும்பொழுது நோய்கள் அதிசயிக்கும் முறையில் குணமாகின. 1965 இல்தான் இக் கல்லறையின் எஞ்சிய அழிவுகள், தொல்பொருள் அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டன.

## இம்ஹொடெப் குறித்து பல்வேறு கருத்துக்கள்

கிரேக்கர்கள் அவர்களுக்கே உரித்தான 'எஸ்க்லீபியஸ்' எனும் மருத்துவ முறையின் அதிபதியான கடவுளை இமோதஸ் என அழைக்கின்றனர். கிரேக்க வாய்மொழிக் கதைகளின்படி இந்த இமோதஸின் விருப்பப்படியே டீடல்ஸ் எனும் கட்டிட நிபுணர் மூலம் கிரேக்கத்தின் மினொஸ் மன்னனுக்கு பிரமிட் அல்லாத ஓர் அற்புதமான கட்டிடத்தை கட்டிக் கொடுத்தான்.

இந்தக் கட்டிடத்தைக் கட்டியபின் டீடல்ஸ் குறித்தும் அவனது மகனான இகாரஸ் குறித்தும் அதிருப்தி கொண்ட மன்னன் அவர்கள் இருவரையும் பிடித்து சிறையிலிட்டான். டீடல்ஸ் குறித்து உருவான கதையின்படி அவர்கள் மெழுகினால் சிறகுகள் அமைத்து பறவை போல் அந்த சிறையில் இருந்து வெளியேறினர். டீடல்ஸ் பறந்து அதிலிருந்து வெளியேறினாலும் மகனால் அங்கிருந்து வெளியேற முடியவில்லை. இகாரஸ் தனது மெழுகுச் சிறகுகளால் வானில் மிக மிக உயரமாகப் பறந்தான். சூரியனை நெருங்க முயற்சிக்கையில் சூரியனின் கடும் வெப்பமான கதிர்வீச்சால் மெழுகுச் சிறகுகள் உருகி மரணத்தைத் தழுவினான்.

பண்டைய சான்றுகளின் படி இம்ஹொடெப் சோசர் எனும் சக்கரவர்த்தியின் ஆலோசனையாளராகவும் செயல்பட்டிருக்கிறார். அந்த சக்கரவர்த்திக்காகவே 'படி பிரமிட்டை' உருவாக்கினார். அந்தப் படி பிரமிட்டை எகிப்தின் புகழ் பூத்த 'நைல்நதி' குறித்தும் ஒரு கோரிக்கையை இறைவன் முன் வைத்து அவரை மகிழ்விப்பதற்காக கட்டினான். யூதர்களின் 'ஹீப்ரு' வாய்மொழிக்கதைகளின்படி அவர்களின் ஜோசப் என்ற பாத்திரத்திற்கு இந்த இம்ஹொடெப் தான் உயிர் கொடுத்ததாக கருதப்படுகின்றது.

**இரஞ்சித் ஜெயகர்**

## ஹொலிவூட் நகருக்குச் சென்ற இம்ஹொடெப்

**1997 ஆம் ஆண்டு ஹொலிவூட் நகரில் அற்புதமான திரைப்படம் ஒன்று வெளியிடப்பட்டது. 'மம்மி' (Mummy) எனும் திரைப்படமே அது. எகிப்தின் பாரேன் மன்னர்களின் காலத்தில் வாழ்ந்த கெட்ட மாயமனிதன் குறித்தே இந்த 'மம்மி' திரைப்படத்தின் கதை எழுதப்பட்டிருந்தது.**

**இந்த திரைப்படத்திற்கு இம்ஹொடெப் எனும் பாத்திரமே அடிப்படையாக அமைந்தது. ஸ்டீவன் சமர்ஸ் இயக்கிய இத்திரைப் படத்தின்படி இம்ஹொடெப் என்பவன் ஒரு தீய மாயக்காரனாகவே சித்தரிக்கப்பட்டிருந்தது. ஆனல்ட் வொஸ்து என்பவரே இம்ஹொடெப் பாத்திரத்தை ஏற்று நடித்தவராவர். 1997 இல் இந்த 'மம்மி' திரைப்படம் மிகப் பெரிய வெற்றி பெற்றதோடு 2001 இல் அதன் இரண்டாம் பாகமும் திரையிடப்பட்டது. இந்த இரு திரைப்படங்களும் இலங்கையிலும் திரையிடப்பட்டன.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலந்து



## அமைவிடம்

வடமத்திய ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகிய போலந்து, வடக்கில் 'போல்டிக்' கடலையும் கிழக்கில் முன்னாள் சோவியத் யூனியனின் குடியரசுகளான உக்ரேன், பெலருஸ்ஸையும் தெற்கில் ஸ்லோவேகியாவையும் மேற்கில் ஜேர்மனியையும் பிரதான எல்லைகளாகக் கொண்டு விளங்குகின்றது.

## தரைத்தோற்றமும் காலநிலையும்

312,679 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்ட போலந்து, நிலப்பரப்பின் விசாலத்தைப் பொறுத்த வரையில் உலகளவில் 69 ஆவது இடத்தை வகிக்கின்றது.

பல்வேறுபட்ட தரைத்தோற்ற வேறுபாடுகளைக் கொண்ட போலந்தின் காலநிலையானது அதிகமாக வட சீதோஷ்ண நிலையைக் கொண்டு விளங்குகின்றது. நாட்டின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதி சமுத்திரத்திற்கருகில் இருப்பதால் அங்கு படிப்படியாக தெற்கில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லச் செல்ல வெப்பம் மற்றும் சமுத்திரக் கால நிலையே நிலவுகின்றது.

## குடித்தொகை

நாட்டின் மொத்த சனத்தொகையில் 96.7% மானோர் சுதேச போலந்து மக்களாவர். ஏனையோர், ஜேர்மனியர்களாகவும் பெலருஸ்யர்களாகவும் உக்ரேனியர்களாகவும் இவர்களுடன் பல்வேறு சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களும் வாழ்கின்றனர்.

இங்கு வாழும் மக்களின் பிரதான மதமாக ரோமன் கத்தோலிக்க மதம் விளங்குகின்றது.




## வரலாறு

நாட்டின் எழுதப்பட்ட வரலாற்று ஆவணங்களின்படி, அதன் வரலாறு கி.பி 966 ஆம் ஆண்டில் ஆரம்பமாகின்றது. அவ் ஆண்டில் முதலாவது மையெஸ்கோ சக்கரவர்த்தியால் வட போலந்து பிரதேசம் கண்டு பிடிக்கப்பட்டது. இதன்போது, போலந்தின் தென்திசை கோத்திரத்தார்களும் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்தமையினால் அப்பகுதிக்கு சிறிய போலந்து எனப் பெயரிடப்பட்டது. அதன்படி, 1047 இல் வட போலந்து மற்றும் தென் போலந்து எனும் இரு பிரதேசங்கள் புனரமைக்கப்பட்டு, கசிமியரின் ஆட்சியின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டது.

1386 இல் அரச குடும்ப விவாக உறவின் காரணமாக போலந்து லிதுவேனியாவுடன் ஒன்றிணைந்தது. அதன்படி, போலந்து -லிதுவேனியா அரச வல்லமையானதோடு அந்நிலை 14 ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை சிறப்பாக விளங்கியது. இக்காலகட்டமானது இந்நாட்டின் 'பொற்காலம்' என வர்ணிக்கப்படுவதோடு இந்தப் பொற்கால யுகத்தில் போலந்து தனது எல்லைகளை மென்மேலும் விரிவு படுத்திக்கொண்டு, ஐரோப்பாவின் பாரிய நிலப்பரப்பைக் கொண்ட நாடாக உருவெடுத்தது.

17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சுவீடன் நாட்டின் ஆக்கிரமிப்போடு போலந்தின் பொற்காலம் மறைய ஆரம்பித்தது; நாடு வீழ்ச்சியை நோக்கிச் சென்றது. அதனைத் தொடர்ந்து படிப்படியாக 1772 இல் ரஷ்யாவாலும் 1793 இல் பிரஸ்யாவாலும் 1795 இல் ஆஸ்திரியாவாலும் போலந்து ஆக்கிரமிக்கப்பட்டு,அந்நாடுகள் தமக்கிடையே போலந்தை பங்கிட்டுக் கொண்டதையடுத்து உலக வரைபடத்தில் இருந்து போலந்து முற்றாக நீக்கப்பட்டது.

இதன்பின் அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகபோலந்து மக்கள் 19ஆம் நூற்றாண்டில் தேசிய எழுச்சி பெற்று போராடத் தொடங்கினர். 1918நொவெம்பர் மாதம் போலந்து மார்ஷல் ஜோசப் என்பவரின் தலைமையில் மீண்டும் மீள்நிர்மாணம் செய்யப்பட்டது. மீண்டும் 1939 செப்டெம்பர் முதலாம் திகதி ஹிட்லரினால் போலந்து ஆக்கிரமிக்கப்பட்டது. அதே மாதம் 17 ஆம் திகதி சோவியத் ரஷ்யப் படையினர் போலந்து நாட்டில் பிரவேசித்து,நாட்டின் கிழக்குப் பகுதியைக் கைப்பற்றினர். மீண்டும் 1941 ஜூன் மாதம் போலந்து முழுமையாக ஜேர்மன் இராணுவத்தின் கீழ் வந்தது.

1944 இல் சோவியத் செம்படையினர் நாட்டினுள் பிரவேசித்து, அங்கு கொம்யூனிச அரசின் நிர்வாகத்தை உருவாக்கி, அதனைக் கொம்யூனிச நாடாக மாற்றியது. அதன்படி 1952 இல் போலந்து மக்கள் குடியரசாக உத்தியோகபூர்வமாக உலகில் பிரசித்தி பெற்றது. 1990 இல் கொம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டதோடு, நாடாளுமன்றக் குடியரசு நாடானது.

| | | |
|---|---|---|
| தலைநகரம் | : | வோர்சோ |
| பெரிய நகரம் | : | வோர்சோ |
| அரச கரும மொழி | : | போலிஷ் (போலந்து மொழி) |
| அரசு | : | நாடாளுமன்றக் குடியரசு |
| ஜனாதிபதி | : | லெச் கெசின்ஸ்கி |
| பிரதமர் | : | டொனல் டஸ்க் |
| மொத்த நிலப்பரப்பு | : | 312,679 சதுர கிலோமீற்றர். (இதில் 3.07% நன்னீர்த் தேக்கங்களாகும்) |
| மொத்த சனத்தொகை | : | 38,518,241 (2007 இன் படி) |
| நாணயம் | : | ஸ்லொட் |
| சர்வதேச தொலைபேசி இலக்கம் | : | +48 |














## பொருளாதாரம்

வடமத்திய ஐரோப்பாவிலேயே ஒரு பலம் வாய்ந்த பொருளாதாரக் கட்டமைப்பிற்கு உரித்தான நாடாகும். நாட்டு மக்கள் விவசாயத்துறையில் குறிப்பாக உருளைக்கிழங்கு, பீட்ரூட், சோளம் என்பனவற்றை விளைவிப்பதோடு பால் உற்பத்தி, செம்மறியாடு, பன்றி வளர்ப்பில் அதிக அக்கறை செலுத்துகின்றனர். இது இயல்பாகவே வளம்மிக்க நாடாக விளங்குகின்றது.

**கிடைக்கும் கனிய வளங்கள்:** நிலக்கரி, கந்தகம், செம்பு, லெட், நாகம்.

**கைத்தொழில் துறை:** இரும்பு மற்றும் உருக்கு உற்பத்தி, இரசாயனத் திரவங்கள், கப்பல் மற்றும் உணவு உற்பத்தி, ஆடை உற்பத்தி.

**முக்கிய வர்த்தகப் பங்காளர்கள்:** ஜேர்மனி, ரஷ்யா, இத்தாலி, பிரான்ஸ், நெதர்லாந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவுப் பயணத்தின் சிறந்த வழிகாட்டி

## ஒக்டோபர் 05 உலக ஆசிரியர் தினம்

### யுனெஸ்கோ பிரகடனம்

*ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ (UNESCO) அமைப்பும் சர்வதேச தொழிலாளர் அமைப்பும் (ILO) 1994 ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமைய 1994 ஆம் ஆண்டிலிருந்து ஒக்டோபர் 05 ஆம் திகதி உலக ஆசிரியர் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது.*

*1966 ஆம் ஆண்டு ஒக்டோபர் 05 ஆம் திகதி ஆசிரியர்களின் தொழில் தகைமை, தராதரம் தொடர்பாக வெளியிடப்பட்ட விதிமுறைகளுக்கு இசைவாக இந்த பிரகடனமானது வெளியிடப்பட்டது. உலகில் 100 இற்கும் மேற்பட்ட நாடுகள் வருடாந்தம் ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதியில் உலக ஆசிரியர் தினத்தைக் கொண்டாடி வருகின்றன. எனினும், இலங்கையில் ஒக்டோபர் மாதம் 06 திகதியே ஆசிரியர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.*

*இந்த தினத்தின் பிரதான குறிக்கோள்களாவன; ஆசிரியர்களை வாழ்த்துவது, பாராட்டுவது, அவர்களின் ஆசிரியத் தொழிலின் மகத்துவத்தை மக்களுக்கு உணர்த்தி கௌரவிப்பது, பரிசுப் பொருட்களைப் பரிமாறிப் பரஸ்பரம் அன்பு தெரிவித்துக் கொள்வது போன்ற வழிமுறைகளின் ஊடாக ஆசிரியர்களைக் கௌரவித்து மகிழ்விப்பதாகும்.*

*அத்துடன், அரசாங்கமும் கல்வித்துறை இலாகா அதிகாரிகளும் ஆசிரியர்களது விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி, ஆசிரியர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறாக உள்ள காரணிகள் மற்றும் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு, அவற்றுக்கான தீர்வுகளை வழங்குதல், ஆசிரியர்களின் திறன் விருத்திக்கான செயற்றிட்டங்களை அமுல்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்காகவும் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.*

எமது வாழ்க்கையின் எழுச்சிக்கும் உயர்வுக்கும் வழிகாட்டியாக இருப்பவர்கள் ஆசிரியர்களே. அறிவு வளர்ச்சியின் பங்காளிகளாகவும் ஆரம்ப நிலையில் இருந்து இறுதி வரையான அறிவுப் பயணத்தில் நம்முடன் கூடவே இருந்து எமது பயணத்திற்குத் துணையாளராகவும் சிறந்த வழிகாட்டியாகவும் இருப்பவர்கள் இவர்கள்தான். எனவே, அவர்களின் முக்கியத்துவத்தையும் மதிப்பையும் பாராட்டி கௌரவிக்கும் வகையில் உலக ஆசிரியர் தினம் வருடாந்தம் ஒக்டோபர் 05 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.



### அழகிய உருவங்களை செதுக்கும் சிற்பிகள்

ஒரு சிற்பியிடம் வெறும் களிமண் குவியல் ஒன்றைக் கொடுத்தால் அவர் அதிலிருந்து பல்வேறு வடிவங்களிலான அழகிய சிற்பங்களைச் செதுக்குவார். உண்மையில் எமது ஆசிரியர்களும் ஒரு திறமை வாய்ந்த சிற்பியை ஒத்தவர்கள்தான். ஏனெனில், வெறும் ஐந்து வயது பூர்த்தியானதும் பாடசாலையில் சேர்க்கப்படுகின்ற குழந்தைகளை ஆசிரியர்கள் மிகவும் பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும் தியாக மனப்பான்மையுடனும் செயற்பட்டு, எதுவுமே அறியாத மாணவர்களுக்கு கல்வியோடு நற்பழக்கவழக்கங்களையும் புகட்டி, நற்பிரஜைகளாக உருவாக்க வழியமைக்கின்றனர். பாடசாலைப் பருவத்தில் ஆசிரியர்கள் புகட்டும் அறிவுதான் இறுதிவரை எமக்குக் கை கொடுக்கின்றது. பல்வேறு துறைகளில் நாம் முன்னேறி மிளிர எமக்கு முதற் துணையாக இருப்பவர்களும் எமது அனைத்து முன்னேற்றங்களிலும் பின்னணியில் இருப்பவர்களும் ஆசிரியர்களே. ஆகவே, அவர்கள் சமூகத்தில் உன்னத நிலையில் கௌரவிக்கப்பட வேண்டியவர்களாவர்.

ஆசிரியர்களின் பணி மிகவும் மகத்தானது. அவர்கள் என்றென்றும் மனித உள்ளங்களில் நிரந்தர இடம் பிடித்து குடியிருக்கக் கூடியவர்கள் என்றால் அது மிகையாகாது. எனவே, அவர்களை குறித்த தினத்தில் மட்டுமல்ல; என்றைக்கும் போற்றிப் புகழ்பவர்களாக இருக்க நாம் உறுதியளிப்போம்.

# முதியோரை என்றும் மதித்திடுவோம்





உலக சிறுவர் தினத்தன்று அனுஷ்டிக்கப்படுகின்ற மற்றொரு தினம் உலக முதியோர் தினமாகும். முதியோர்களின் முக்கியத்துவம், உரிமைகள், கடமைகள், அவர்களுக்காக ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்காகவே இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இன்று குழந்தைகளாக-இளைஞர்களாக-நல்ல திடகாத்திரமான பிரஜைகளாக இருப்பவர்கள்தான் காலம் செல்லச் செல்ல முதுமை நிலையை அடைகின்றனர். முதுமை நிலையை அடையும் ஒவ்வொருவரும் நல்ல திடகாத்திரமாக இருக்கும்போது குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் பல்வேறு அர்ப்பணிப்புக்களையும் பங்களிப்புக்களையும் சேவைகளையும் வழங்குபவர்களாகவே இருக்கிறார்கள்.

### முதியோர்களின் நிலை

இன்று பெரும்பாலும் முதியவர்களின் உறைவிடங்கள் வயோதிபர் இல்லங்களாக, தெருவோரங்களாக இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. பிள்ளைகள் வளர்ந்து ஆளாகியவுடன் தமக்கு அவர்களைக் கவனிப்பதற்கோ, அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கோ போதிய நேரம் இல்லைஎன்ற காரணத்தை மையமாக வைத்து இவர்களை ஒதுக்கித் தள்ளிவிடுகின்றனர்.

குழந்தைகளை சிறுவயது முதல் நல்ல முறையில் பராமரித்து, உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்து, அறிவு புகட்டி நல்ல உயர்ந்த ஸ்தானத்திற்கு கொண்டு வந்த இவர்களின் இன்றைய நிலை பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.



### உலக முதியோர் தினம் ஏன் அனுஷ்டிக்கப்படுகின்றது?

பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டு, அநாதரவாக வாழும் முதியோர்கள் மீது அன்பு காட்டி, அவர்களது தேவைகள், உரிமைகள், அவர்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் குறித்து சமூகத்தின் கவனம் திருப்பப்பட வேண்டும் எனும் பிரதான நோக்கங்களைக் கருத்தில் கொண்டே உலக முதியோர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

எனவே, இன்று இளம் பருவத்தினராக இருக்கும் ஒவ்வொருவரிடமும் நாம் முதுமைப் பருவத்தை அடையும் போது நமது குழந்தைகளால் புறக்கணிக்கப்பட்டு, அநாதரவாகும் நிலை நமக்கும் ஏற்படலாம் என்ற எண்ணம் இருக்குமாயின் இன்று முதுமை நிலையை எய்தியிருக்கும் எவருக்கேனும் இந்நிலை ஏற்படுவதை அனுமதிக்க மாட்டார்கள். எனவே, பெற்றோர்கள் குழந்தைகளுக்கு ஆரம்பத்திலிருந்தே முதியோர்களுக்கு மதிப்பளித்து, கௌரவமளிக்கும் நல்ல பண்புகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும். வயோதிபர்களை மரியாதை செய்து, கண்ணியப்படுத்தும் பிரஜைகளாக அவர்களை உருவாக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும்.

சிறுவர்களே! உங்களது பெற்றோர், உற்றார், உறவினர்களை இன்று மட்டுமல்ல என்றும் மதிக்கப் பழகிக்கொள்ளுங்கள். அவர்கள் முதுமை அடையும்போது நல்ல முறையில் பராமரித்து, கவனிக்கும் மனநிலையை உங்களுக்குள் வளர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், இன்று சிறுவர்களாக இருக்கும் நீங்கள் நாளை இந்த நிலையை அடைவீர்கள் என்பதை மறக்கலாகாது.

**அமீர் ஹுஸைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ... சிறுவர்களாகிய



**நா**ட்டின் எதிர்காலம், எதிர்கால சந்ததியினரான சிறுவர்களிடமே தங்கியிருக்கின்றது. அதனைக் கருத்தில் கொண்டுதான் சிறுவர்களுக்கென்று பிரத்தியேக தினமொன்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆம்...... அந்த நாள்தான் இன்றைய நாளான ஒக்டோபர் முதலாம் திகதி.

## சிறுவர் உரிமை என்றால் என்ன?

சிறுவர்களின் நன்மை கருதி அவர்களின் நல்வாழ்விற்காக உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமான சட்டதிட்டங்களும் கட்டளைகளும் அமுல்படுத்தப்பட்டு, அரசியல் யாப்புக் கட்டளைச் சட்டங்களிலும் சிறுவர் நலன் கருதி பல்வேறு உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிறுவர்களை பொறுப்புள்ளவர்களாகவும் நற்பிரஜைகளாகவும் உருவாக்குவதே அதன் அடிப்படை நோக்கமாகும். அந்நோக்கத்தை அடையும் பொருட்டு சத்துணவு, சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி, பொழுதுபோக்கு எனும் பல்வேறு துறைகளை சிறந்த முறையில் சிறுவர்களுக்கு வழங்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறுவர் நலன் கருதி இலங்கையில் உள்ள சட்டங்கள்

**அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைச் சரத்துக்கள்:**

இதில் பெண்கள், சிறுவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றோரின் முன்னேற்றத்திற்காக சட்டங்கள் அல்லது உபசட்டங்கள் அல்லது விசேட விதிமுறைகளை செயற்படுத்துவது தொடர்பில் எந்தவொரு யாப்பு மூலமும் இடையூறுகள் விளைவிக்கப்பட மாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



‘அனைத்துப் பிரச்சினைகளின் போதும் நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கங்களுக்கு முகம் கொடுப்பவர்கள் சிறுவர்களே’

**சிறுவர் உரிமைகள் சம்பந்தமான சரத்துக்கள்:**

சிறுவர் உரிமைகள் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கீழ் இலங்கையும் இணைந்துள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள சரத்துக்களுக்கு இணக்கமும் தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் சிறுவர் பிரகடனத்தின்படி, 18 வயதிற்குக் கீழ்பட்ட அனைவரும் சிறுவர்களாகவே கருதப்படுகின்றனர். அத்துடன், சிறுவர்களின் உரிமைகளுக்கென பிரத்தியேகமான 40 சரத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

**சிறுவர் மற்றும் இளைஞர் கட்டளைச்சட்டம்:**

இச்சட்டம் 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட சகல சிறுவர்களுக்கும் பொருந்தும். தவறொன்றை இழைத்த நபராகவோ வேறு வழிகளிலோ சிறுவர் ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்படும் பட்சத்தில் நீதிமன்றம் சிறுவரின் நலனில் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறித்த சிறுவரை பாதிப்புக்குள்ளாக்கிய சூழலில் இருந்து நீக்கி அவருக்குத் தேவையான கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

**2006 இலக்கம் 16 என்ற கட்டளைச் (திருத்த) சட்டம்:**

இச்சட்டத்தின்படி, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தை தவிர்த்தல்,சிறுவர்களை பலாத்காரமாகவோ அல்லது அச்சுறுத்தியோ வேலைக்கு அமர்த்தல், அடிமையாக நடத்துதல் மற்றும் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளன.

**2006 இலக்கம் 7 என்ற குற்றவியல் நடுவர் கட்டளைச் (திருத்த) சட்டம்:**

சிறுவர் துன்புறுத்தல், சிறுவர் துஷ்பிரயோகம், கடத்திச் செல்லல், பிணையாளியாக வைத்தல், வர்த்தக நடவடிக்கைக்குப் பயன்படுத்தல், அடிமையாகப் பயன்படுத்தல், பலாத்காரமாகவோ, அச்சுறுத்தியோ வேலை வாங்கல், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்தப்படல், சிறுவர் ஒருவரைப் பிள்ளையாக வளர்த்தல் மற்றும் இதனுடன் சம்பந்தப்பட்ட தவறுகள் அனைத்தும் இச்சட்டத்தின் மூலம் குற்றம் எனக் கருதப்பட்டு, அதற்குரிய தண்டனை வழங்க ஒழுங்கு விதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சிறுவர்களின் உரிமைகள் சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள மேலும் பல சட்டங்கள்:**

* 1995 இலக்கம் 22 எனும் திருத்தச் சட்டம்.
* 2003 இலக்கம் 8 என்ற பெண்கள், இளைஞர் மற்றும் சிறுவர்களை பணியாளர்களாகப் பயன்படுத்தும் திருத்தச்சட்டம்.
* 2005 இலக்கம் 34 என்ற வீட்டு வன்முறை செயற்பாட்டை தவிர்க்கும் சட்டம்.
* 2005 இலக்கம் 16 எனும் சுனாமி (விசேட விதிமுறை) சட்டம்.

**ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமை சம்பந்தமான பிரகடனம்:**

1989 நொவெம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டத்தின்போது சிறுவர் உரிமைகள் சம்பந்தமான பிரகடனம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதில் ஆண், பெண் பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் தேவைகள் குறித்து விரிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, சிறுவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அரசாங்கத்தாலும் ஏனைய பெரியோராலும் நிறைவேற்றப்படவேண்டிய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த பிரகடனத்தின் மூலம் சிறுவர்களின் சமூக, பொருளாதார, கலாசார உரிமைகள் என்பனவற்றோடு அவர்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளன. மேலும்,

* பிறப்பதற்கும் பெயரொன்றை சூட்டவும் ஓரினத்திற்கு சொந்தமாவதற்கு,
* அன்பு, பாதுகாப்பு, கருணை நிறைந்த குடும்பத்தில் வாழ்வதற்கு,
* போஷாக்கு நிறைந்த உணவை தேவைக்கேற்ப பெறுவதற்கும் சுகாதாரமான ஆரோக்கியமான செயல்திறன் மிக்க சரீரத்தைப் பெறுவதற்கு,
* விளையாட்டு, ஓய்வு, பொழுதுபோக்கு அம்சங்களை அனுபவிப்பதற்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ...று..... ...ய எங்கள் தினம்

✱ அரசின் பாதுகாப்பையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்கு,

✱ தனது கருத்துக்களையும் திறன்களையும் சுதந்திரமாக வெளியிடுவதற்கு,

✱ நல்ல முறையில் கல்வியைப் பெறுவதற்கும் சுய திறமைகளை வெளிப்படுத்தவும் வாழ்க்கைத் தரங்களை வளர்த்துக் கொள்வதற்கு.

அனைத்து ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்கும் உரிமை உண்டு என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறுவர்களின் நன்மை கருதி உதயமான சர்வதேச அமைப்புக்கள்

**சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO):**

சிறுவர்களை அடிமைகளாக விற்றல், பலாத்காரமாக வேலைக்கமர்த்தல், சட்ட விரோதமாக சிறுவர்களை தாய்நாட்டில் இருந்து வேறோர் நாட்டுக்கு அனுப்பல் அல்லது வெளியேற்றல் போன்ற துஷ்பிரயோகங்களில் சிறுவர்களை ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அமைப்பு மேற்கொள்ளும்.

**சிறுவர்தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச வேலைத்திட்டம் (IPEC):**

1992 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற வேலைத்திட்டம் இதுவாகும். இதன் மூலம் சிறுவர்களின் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவர்களைத் தொழிலில் அமர்த்துவதை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

**ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் அவசர தேவை நிதியம் (UNICEF):**

1946 இல் ஆரம்பிக்கப்பட்ட இத்தாபனத்தின் அடிப்படை நோக்கமானது 2 ஆம் உலக யுத்தத்தின் பின் போரினால் பாதிக்கப்பட்ட அநாதை சிறுவர்கள், நோய்களால் பீடிக்கப்பட்டவர்கள், உளரீதியான பாதிப்புக்கு உள்ளான சிறுவர்கள் என பல்வேறுபட்ட துயரங்களுக்கு முகம் கொடுக்கின்ற சிறுவர்களை எதிர்கால சுபீட்சத்திற்கு இட்டுச் செல்லல் என்பதாகும்.

## இலங்கையில் சிறுவர்களுக்காக பணிபுரியும் நிறுவனங்களும் அதிகாரிகளும்

சிறுவர் முன்னேற்றத்திற்கும் நலன்புரிச் செயற்பாடுகளுக்காகவும் இன்று இலங்கையில் பணிபுரியும் மிகமுக்கிய அரச நிறுவனமாக சிறுவர் முன்னேற்றம் மற்றும் மகளிர் விவகார அமைச்சு திகழ்கின்றது. இவ் அமைச்சின் கீழ் பல நிறுவனங்கள் செயல்படுகின்றன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சுற்றாடல் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம், சிறுவர் உரிமை பிரகடன நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிருத்தி அதிகார சபை, இலங்கை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் செயலகம் என்பனவாகும்.

இவை தவிர, கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு என்பனவும் சிறுவர் நலன் கருதிப் பல திட்டங்களை செயல்படுத்துகின்றன. இவற்றோடு மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவும் செயல்படுகின்றது.

## சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

சிறுவர்களுக்கான அடிப்படை உரிமைகள் மற்றும் தேவைகள் மறுக்கப்படுதலே 'சிறுவர் துஷ்பிரயோகம்' என அழைக்கப்படுகின்றது. சிறுவர் துஷ்பிரயோகமானது உடல்-உள ரீதியில் நடைபெறலாம்.

## சிறுவர் பாதுகாப்பு

சிறுவர் துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களை பாதுகாப்பதற்கு இரு பிரதான வழிமுறைகள் உள்ளன.

1. துஷ்பிரயோகத்திற்கு இலக்காவதற்கு முன் அவர்களை விடுவித்தல்.
2. துஷ்பிரயோகத்திற்கு இலக்காகி இருக்கும் வேளை அவர்களை விடுவித்துப் பாதுகாத்தல்.

## இவ்வாண்டின் உலக சிறுவர் தினக் கருப்பொருள்

'சிறுவர்களுக்கு செவிமடுப்பதனூடாக அவர்களின் உலகை ஒளிமயமாக்குவோம்' என்பது இவ்வாண்டின் உலக சிறுவர் தினக் கருப்பொருளாகும். நடைமுறையில் வீட்டில், பாடசாலையில் மற்றும் சமூகத்தில் சிறுவர்களின் எண்ணங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்துபோதியளவு கருத்தில் கொள்ளப்படுவதில்லை. எனவே, அவ்வாறான நிலைமைகளுக்குத் தீர்வு வழங்கும் நோக்கிலேயே இவ்வாண்டுக்கான சிறுவர் தின கருப்பொருள்முன்வைக்கப்பட்டுள்ளது.

## சிறுவர்களும் அவர்களின் எதிர்காலமும்

இன்று உலகம் எதிர்நோக்கும் பல்வேறு பொருளாதார, அரசியல் பிரச்சினைகள்,கலாசாரச் சீரழிவுகள், இயற்கை அனர்த்தங்கள், உள்ளக-வெளியக யுத்தங்கள் என அனைத்துப் பிரச்சினைகளின் போதும் நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கங்களுக்கு முகம் கொடுப்பவர்கள் சிறுவர்களே. மேற்படி, காரணங்களால் அவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படும் உணவு, கல்வி, சுகாதாரம், ஆரோக்கியம், பாதுகாப்பு என்பன கிடைப்பதில்லை. ஆகவே, அவர்கள் தொடர்பிலான நன்மையான காரியங்களை மேற்கொள்வது பெரியோர்களின் கடமையாகவும் பொறுப்பாகவும் இருக்கின்றன.

-இரஞ்சித் ஜெயகர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்புகளும்

| | |
|---|---|
| ✱ ஜோசப் பிரீஸ்லி | - ஒட்சிசன் (1733-1804) |
| ✱ மைக்கல் பரடே | - மின்காந்தத் தூண்டல் (1791-1867) |
| ✱ ஆர்க்கிமிடிஸ் | - திருகு எனும் உபகரணம் (287-212 கி.மு) |
| ✱ லாமார்க் | - ‘உயிரியல்’ எனும் பதத்தை முதலில் பிரயோகித்தவர். (1744-1829) |
| ✱ லூயி பாஸ்ரர் | - விசர்நாய்க்கடி மருந்து (1822-1895) |
| ✱ சார்ள்ஸ் டாவின் | - கூர்ப்புக் கொள்கை (1809-1882) |
| ✱ வில்லியம் ரொன்ஜன் | - எக்ஸ் கதிர் (1845-1923) |
| ✱ மேரி கியூரி | - ரேடியம் பொலோனியம் (1867-1934) |
| ✱ அலெக்சாண்டர் பிளெமிங் | - பென்சிலின் (1955) |
| ✱ வில்லியம் ஹார்வே | - குருதிச் சுற்றோட்டத்தொகுதி (1578-1657) |
| ✱ கிறகர் மென்டல் | - பிறப்புரிமையியல் கோட்பாடு (1822-1884) |
| ✱ ஜேம்ஸ் வாட் | - நகல் எடுக்கும் இயந்திரம் (1736-1819) |

தொகுப்பு: பூர்ஹா கைஸ்,
நளீம் ஹாஜியார் மகளிர் கல்., சீனன்கோட்டை, பேருவளை.

## எண்ணத்தின் வலிமை



அரேபிய நாட்டை அக்பர் என்ற ஒரு மன்னன் ஆண்டு வந்த காலம். அவனுக்கு அழகு, அந்தஸ்து என்று எல்லாம் இருந்தும் அவனது முதுகில் அவலட்சணமான கூன் ஒன்று காணப்பட்டது. இந்தக் கூன் காரணமாக அந்நாட்டு மக்கள் அனைவரும் அவனைக் கேலி, கிண்டல் செய்யும் நிலைமைக்கு மன்னன் தள்ளப்பட்டான். அதுமட்டுமன்றி ஓர் இளவரசியும் அக்பரை திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் அக்பர் நாட்டு மக்களின் நிலைமையை அறிந்து கொள்ளும் ஆவலுடன் மாறுவேடம் பூண்டு ஒவ்வொரு ஊராக உலா வந்து கொண்டிருந்தான். அவ்வேளையில், ஓரூரில் நான்கைந்து உழவர்கள் கூடி ‘‘கூன் மன்னனுக்கு குடிகள் அவசியம் தானா? இந்தக் கூன் அக்பரின் ஆட்சியின் கீழ் நாம் வாழ வேண்டிய நிலை... சீ!’’ என்று அக்பரை இழிவுபடுத்திப் பேசிக் கொண்டிருந்தனர். இதைக் கேட்ட அக்பரின் மனம் சஞ்சலத்திற்குட்பட்டது. எனினும், மனதைத் திடப்படுத்திக் கொண்டு அரண்மனைக்கு வந்து தனது அறையில் உட்கார்ந்து தனது கூனைப் பற்றி கவலையுடன் சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு தான் கூனில்லாமல் எப்படி இருப்போம்? என்ற யோசனை உதயமாகியது.

பின் ஒரு சிற்பியை அழைத்து தன்னைக் கூனில்லாமல் செதுக்கும்படி உத்தரவிட்டான். சிற்பியும் அதேபோன்று கூனில்லாமல் மன்னர் அக்பரின் சிலையை செதுக்கினான். பின்னர் மன்னன் சிற்பிக்கு நிறையப் பொற்காசுகளையும் பரிசுகளையும் கொடுத்து இவ்விடயத்தை எவரிடமும் கூறாதே! எனக் கூறி அனுப்பி வைத்தான். அதனைத் தொடர்ந்து மன்னன் எந்நாளும் இரவு யாருக்கும் தெரியாமல் அச்சிலையை தோட்டத்தில் வைத்து ரசித்தவண்ணம் அதேபோன்று தானும் நிமிர்ந்து நிற்க முயற்சித்தான். இவ்வாறாகப் பலகாலம் அவன் செய்து வந்தான். அப்போது சிறிது சிறிதா[illegible] அவன் கூன் மறையத் தொடங்கியது. பின்னர் ஒருநாள் நன்றாகவே கூன் மறைந்துவிட்டது. இதற்குக் காரணமாக அவனது வலிமையான எண்ணமே அமைந்தது.

பின்னர் கூனில்லாத அழகிய வாலிபனாக மன்னன் அக்பர் திகழ்ந்தான். அதைத் தொடர்ந்து மக்கள் அனைவரும் கேலி, கிண்டல் செய்யாமல் அவனை சிறப்பாக மதித்தனர். அதுமட்டுமன்றி மன்னன் அக்பர் மர்ஜுனா என்ற அழகிய இளவரசியைத் திருமணம் செய்து கொண்டான்.

எனவே, நாமும் எமது எண்ணம் முழுவதையும் எமது லட்சியத்தில் செலுத்தினால் வாழ்வில் முன்னேறலாம்!

தொகுப்[illegible]
பாத்திமா ஸப்ரினா நசீர்,
இ/சீ.சீ.த.ம.வித்.,
பலாங்கொடை.




## முயற்சியின் முக்கியத்துவம்

‘முயற்சி திருவினை ஆக்கும்; அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். அழுத பிள்ளை பால் குடிக்கும்’ போன்ற பழமொழிகள் முயற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. உலகம் போற்றும் சாதனையாளர்கள் எல்லாம் பெருமுயற்சி உடையவர்களே ஆவார்கள்.

காடுகளில் சுற்றித்திரிந்த மனிதன் இன்று நாகரிக முன்னேற்றம் அடைந்து வாழ்வதே முயற்சியின் பயன் அன்றி வேறில்லை. சோம்பல் ஒருவனது வாழ்வை அழிக்க வந்த கெட்ட பிசாசு. அப்பிசாசை விரட்டி அடித்து இளமை முதற்கொண்டே தளராது உழைப்பவர் வாழ்வில் உயர்ச்சி அடைவார். விதியின் பயனாக ஒருவரது செயலில் தடை ஏற்பட்டாலும் பெருமுயற்சி அதாவது விடா முயற்சி விதியை வென்று சாதனை



படைக்க வழிகோலும். ஒரு காரியத்தைச் செய்ய முற்படுவதற்கு முன் அது எம்மால் செய்யக்கூடிய காரியமா? அது நாம் செய்ய வேண்டிய காரியமா? என்பதை அறிந்து துணிந்து செய்தல் வேண்டும். அக்காரியத்தை நாம் செய்வதனால் நாமும் பயனடைந்து, எம்மை சார்ந்தோரும் பயனடைவதாக அமைதல் வேண்டும்.

அக்காரியத்தை விடாமுயற்சியுடனும் முழு மனதுடனும் செய்தால் நிச்சயமாக எமக்கு வெற்றி உண்டு. எமது முன்னேற்றங்களுக்குத் தடையாக இருப்பது சோம்பலும் மனோபயமும் என்பதை ஞாபகத்தில் நிறுத்தி முழு முயற்சியுடனும் மனோபலத்துடனும் எவ்வகையான காரியத்தையும் திறம்படச் செய்வோமானால் எமது எதிர்காலம் சிறப்படைவது நிச்சயம்.

எஸ்.நிமலேஸ்வரன்,
ம.மா.கொத்.விக்னேஸ்வரா ம.வித்.,
கட்டுக்கித்துளை.

## வாழும் வழி



நடந்ததை நினைத்து வருந்தாமல் - இனி
நடப்பதில் கவனம் செலுத்தி விடு!
உடைந்த பாத்திரம் ஒட்டுமுன்னம் - நல்ல
உயரிய பாத்திரம் படைப்பது மேல்
இடரினைக் கண்டு அஞ்சாது - அதை
இருதய பலத்துடன் எதிர்கொள்வாய்
இறைவனைத் துதித்துக் கண்ணியமாய் - தினம்
கடமையைச் செய்து நீ உயர்வடைவாய்!

எம்.சரண்யா,
க/தெ.ஊறுகல த.வித்.,
மெதமஹநுவர.




படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:...............................
முகவரி:...............................
...............................
பாடசாலை:...............................
வகுப்பு:...............................

அனுப்ப வேண்டிய முகவரி :
‘விஜய்’
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு


## சிறந்தவை இவை

| | |
|---|---|
| ✱ சிறந்த ஆசிரியர் | - அனுபவம் |
| ✱ சிறந்த படிப்பு | - பொறுமை |
| ✱ சிறந்த ஆட்டம் | - கடமை |
| ✱ சிறந்த அணிகலன் | - புன்னகை |
| ✱ சிறந்த ஊட்டம் | - கல்வி |
| ✱ சிறந்த புத்தகம் | - வாழ்க்கை |
| ✱ சிறந்த நண்பன் | - புகழ் |
| ✱ சிறந்த உணவு | - சிந்தனை |
| ✱ சிறந்த பாதுகாப்பு | - நேர்மை |
| ✱ சிறந்த பண்பு | - நட்பு |
| ✱ சிறந்த மதம் | - சமத்துவம் |

ஜே.கணேசன் ஜெகதீஸ்வரி,
நெதுன்கிட்டிய,
இறக்குவானை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு







கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற பாடசாலைகளுக் கிடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் கலந்து கொண்டு, அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி மாணவர்கள் 30 பதக்கங்களை சுவீகரித்துக் கொண்டனர். அம்மாணவர் களைப் பாராட்டி அட்டாளைச்சேனை 'சுப்பர் சொனிக்' விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த பாராட்டு விழாவில் கலந்து கொண்ட பதக்கம் வென்ற மாணவர்களைப் படத்தில் காணலாம்.

*(தகவல்-அ.ற.ஸஹிர் அஹமட், 'விஜய்' இளம் செய்தியாளர்)*

உடத்தலவின்ன மடிகே இங்க்லிஷ் எக்கடமி (English Academy) பாலர் பாடசாலையின் பணிப் பாளர், ஆசிரியைகள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த வருடாந்த விளையாட்டுப் போட்டி, அண்மையில் உடத்தலவின்ன ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இங்கு பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந் தன. இதன்போது மாணவர்கள் ஓட்டப்போட்டி, விநோத உடைப்போட்டி மற்றும் உடற்பயிற்சி செயற்பாடுகளில் பங்குபற்றி, தமது திறமைகளை வெளிக்காட்டுவதைப் படங்களில் காணலாம்.

*(தகவல், படம் - எஸ்.ஐ.எம்.நளீம், உடத்தலவின்ன)*

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2151

அபிஷா ஷெஹானி,
தரம் - 1,
கிங்ஸ்டன் ச.பாட.,



அங்.இல : 2152

க.கஜமுகன், தரம் - 11,
வெற்றிலைக்கேணி
பரமேஸ்வரா வித்.,
வெற்றிலைக்கேணி.



அங்.இல : 2153

என்.எம்.இன்சாம்,
தரம் - 6^B,
ஓட்டமாவடி தே.பா.,
ஓட்டமாவடி.



அங்.இல : 2154

பு.தபோகரன்,
தரம் - 8^B,
யாழ்ப்பாணக் கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல : 2155

சி.சுஜிபன்,
தரம் - 9^A,
இராமநாதபுரம் ம.வித்.,
கிளிநொச்சி.



அங்.இல : 2156

பா.பார்த்திபன்,
தரம் - 12,
வித்தியானந்தாக் கல்.,
நெடுங்கேணி.



அங்.இல : 2157

யோ.சிவாஜினி,
தரம் - 8,
மட்டுவில் கமலாசனி வித்.,
மட்டுவில்.



அங்.இல : 2158

நா.ஐங்கரன்,
தரம் - 13^B,
புதுக்குடியிருப்பு ம.கல்.,
முல்லைத்தீவு.



அங்.இல : 2159

எம்.எஃப்.எம்.நசேக்,
தரம் - 9^D,
பொத்துவில் ம.கல்.,
பொத்துவில்.



அங்.இல : 2160

ர.யக்சன்,
தரம் - 10^C,
புனித சூசையப்பர் கல்.,
திருகோணமலை.



அங்.இல : 2161

ச.பன்னீர்ச்செல்வம்,
தரம் - 10,
திருவையாறு ம.வித்.,
கிளிநொச்சி.



அங்.இல : 2162

எம்.என்.எம்.முபாரிஸ்,
தரம் - 11^A,
குருகுத்தல மு.ம.வித்.,
கடுகண்ணாவை.





கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ஜே.எஃப்.நஸ்ரின்,
தரம் - 9^A,
அல்-ஹிதாயா ம.வித்.,
மீராவோடை.



எம்.ஃபினோஸ், தரம் - 8,
ப/முஸ்லிம் ம.வித்.,
வெளிமடை.



எஸ்.கார்த்திக், தரம் - 3,
பள்ளத்தன்ன த.வித்.,
கம்மடுவ.




எம்.எஃப்.நளீபா,
தரம் - 3^D,
மகளிர் மு.வித்.,
புத்தளம்.



அப்துல் ரஹ்மான், தரம் - 1,
அப்துல் ஏ.முஸ்லிம் பா.,
ரத்தோட்டை.



ஆர்.மணிவண்ணன்,
தரம் - 6^B,
எம்.பி.பரியோவான்
த.ம.வித்.,
இறக்குவானை.



எம்,என்.எம்.ஆதில்,தரம் - 7^T,
சென்.சில்வெஸ்டர்ஸ் கல்.,
கண்டி.



சி.நவநீதன், தரம் - 5,
டெம்பள்ஸ்டோவ் த.வித்.,
ரொசல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையில் நடைபெறும் ஒரு சிறிய உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

පුතා: මගේ දත කකියනවා අම්මේ.
மகே தத ககியனவா அம்மே.
மகன்: எனது பல் வலிக்குது அம்மா.

අම්මා: පුතේ මෙහේ එන්න. කට අරින්න.
புதே மெஹே என்ன. கட அறின்ன.
அம்மா: மகன் இங்கே வாங்க. வாயைத் திறங்க.

කොයි දතද කකියන්නේ?
கொய் ததத ககியன்னே?
எந்தப் பல் வலிக்குது?



පුතා: මේ දත කකියනවා.
மே தத ககியனவா.
மகன்: இந்தப் பல் வலிக்குது.

අම්මා: කට සෝදන්න පුතේ.
கட சோதன்ன புதே.
அம்மா: வாயைக் கழுவுங்க மகன்.

පුතා: මම කට සේදුවා අම්මේ.
மம கட சேதுவா அம்மே.
மகன்: நான் வாய் கழுவினேன் அம்மா.

අම්මා: අද දත් මැද්දද?
அத தத் மெத்தத?
அம்மா: இன்று பல் துலக்கினாயா?



පුතා: ඔව් අම්මේ. අද දත් මැද්දා.
ஒவ் அம்மே. அத தத் மெத்தா.
மகன்: ஆம் அம்மா. இன்று பல் துலக்கினேன்.

අම්මා: හොඳයි පුතේ, දතට මේ බෙහෙත තියන්න.සනීපවෙයි.
ஹொந்தய் புதே, ததட மே பெஹெத தியன்ன. சனீப வெய்.
அம்மா: நல்லது மகன், பல்லுக்கு இந்த மருந்தை வைங்க. குணமாகும்.

පුතා: හොඳයි අම්මේ.
ஹொந்தய் அம்மே.
மகன்: நல்லது அம்மா.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: என்னுடைய பல் வலிக்குது அம்மா.
මගේ දත කකියනවා අම්මේ.

i. வாயைத் திறங்க.
..............................................................
ii. வாய் கழுவுங்க.
..............................................................
iii. நான் வாய் கழுவினேன்.
..............................................................
iv. நான் பல் துலக்கினேன்.
..............................................................






**'Shall' எனும் எதிரிடை துணைவினைச் சொல் (Modal Auxiliary Verb) வாக்கியங்களில் கையாளப்படும் முறை**

மேலும் உதாரணங்கள் இதோ:-

(அ) Shall I open?
நான் திறக்கவா?

(ஆ) Shall I open this window?
நான் இந்த ஜன்னலைத் திறக்கவா?

(இ) Shall I open this letter?
நான் இந்தக் கடிதத்தைத் திறக்கவா?

(அ) Shall I write?
நான் எழுதவா?

(ஆ) Shall I write my name?
நான் எனது பெயரை எழுதவா?

(இ) Shall I write a letter?
நான் கடிதம் ஒன்றை எழுதவா?

(அ) Shall I take?
நான் எடுத்துக் கொள்ளவா?

(ஆ) Shall I take this pen?
நான் இந்தப் பேனாவை எடுத்துக் கொள்ளவா?

(இ) Shall I take my book?
நான் எனது புத்தகத்தை எடுத்துக் கொள்ளவா?

(அ) Shall I show?
நான் காண்பிக்கவா?

(ஆ) Shall I show you?
நான் உனக்குக் காண்பிக்கவா?

(இ) Shall I show you that picture?
நான் அந்தப் படத்தை உனக்குக் காண்பிக்கவா?

(அ) Shall I wear?
நான் அணிந்து கொள்ளவா?

(ஆ) Shall I wear this shirt?
நான் இந்தச் சட்டையை அணிந்து கொள்ளவா?

(இ) Shall I wear my shoes?
நான் எனது பாதணிகளை அணிந்து கொள்ளவா?

(அ) Shall I bring?
நான் கொண்டு வரவா?

(ஆ) Shall I bring that parcel?
நான் அந்தப் பொதியைக் கொண்டு வரவா?

(இ) Shall I bring some water?
நான் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரவா?

(அ) Shall we wear the uniform?
நாங்கள் சீருடையை அணிந்து கொள்வோமா?
(எங்களுக்குள் நாங்களே அபிப்பிராயம் கோருதல்)

(ஆ) Shall we bring some water?
நாங்கள் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருவோமா?
(எங்களுக்குள் நாங்களே அபிப்பிராயம் கோருதல்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.



# ஐ.நா பாதுகாப்பு சபையை விரிவுபடுத்துமாறு வேண்டுகோள்!

"ஐ.நா.பாதுகாப்பு சபையிலும் ஜி-8 நாடுகள் அமைப்பிலும் மேலும் பல நாடுகளை சேர்த்துக் கொள்ளும் வகையில் அவற்றை உடனடியாக விரிவுபடுத்த வேண்டும்" என்று பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோசி வலியுறுத்தி இருக்கிறார்.

ஐ.நா பாதுகாப்பு சபையில் மொத்தம் 15 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இவற்றில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய 5 நாடுகள் மட்டும் நிரந்தர உறுப்பு நாடுகள். மீதி 10 நாடுகள் தற்காலிக உறுப்பு நாடுகள். இவை சுழற்சி முறையில் இந்த அமைப்பில் இடம்பெற்று வருகின்றன.

ஐ.நா பொதுச்சபை கடந்த 24 ஆம் திகதி பொதுச்செயலாளர் பான் கீ மூனினால் தொடக்கி வைக்கப்பட்டது. இதில் உரையாற்றிய பிரான்ஸ் ஜனாதிபதி, "21 ஆம் நூற்றாண்டு உலகத்தை 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நிறுவனங்களால் ஆளமுடியாது. இன்றைய பெரும் சக்திகளும் நாளைய சக்திகளும் ஒன்றுடன் ஒன்று தோள் கொடுக்க ஒன்றுபட வேண்டும். ஒன்றுபட்ட சக்திகள் இணைந்து பொறுப்புகளை சுமக்க வேண்டும்.

ஐ.நா பாதுகாப்பு சபையை விரிவுபடுத்துவதற்காக மேலும் பல நாடுகளை சேர்த்துக்கொள்ளும் வகையில் பாதுகாப்பு சபை உடனடியாக விரிவுபடுத்தவேண்டும். அதுபோல ஜி-8 நாடுகள் அமைப்பிலும் மேலும் பல நாடுகளை சேர்த்து அதை ஜி-13 அல்லது ஜி-14 என்ற பெயரில் விரிவு படுத்தவேண்டும். இதில் இந்தியா, சீனா,தென்னாபிரிக்கா, மெக்சிகோ, பிரேசில் ஆகிய நாடுகளை சேர்க்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதியின் இந்த உரையானது அங்கத்துவ நாடுகளை சிந்திக்கத் தூண்டியுள்ளதாகவும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

# பங்களாதேஷில் டிசம்பரில் பொதுத்தேர்தல்





பங்களாதேஷில் பொதுத்தேர்தல் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் ஆட்சி அதிகாரத்தை ஜனநாயக அரசாங்கமொன்றிடம் கையளிப்பதற்காகவே இந்த தேர்தலை நடத்துவதாக பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்தின் தலைவரான ஃபக்ருதீன் அஹமட் குறிப்பிட்டுள்ளார்.

அந்நாட்டில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு நிலை காரணமாக கடந்த 2007 ஆம் ஆண்டில் நடைபெறுவதாக இருந்த தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து ஏற்படுத்தப்பட்ட இடைக்கால அரசாங்கத்தினால் உடனடியாக அவசர கால நிலை அமுல் படுத்தப்பட்டது. இந்நிலையில் தற்போது தேர்தலை நடத்தப்போவதாக இடைக்கால அரசாங்கம் அறிவித்துள்ளதை அரசியல் கட்சிகள் வரவேற்றுள்ள அதேவேளை அவசரகால நிலையும் நீக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளன.

# கிரீன்லாந்து பனிப்பிரதேசம் எதிர்பார்த்ததிலும் விட வேகமாக உருகுகிறது

தீவின் 80 சதவீதத்துக்கும் அதிகமான பிரதேசத்தை உள்ளடக்கியுள்ள கிரீன்லாந்து பனிப்பிரதேசம் முன்னர் எதிர்பார்த்ததை விட வேகமாக உருக ஆரம்பித்துள்ளதாக 'டேனிஸ்' ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பூமியில் வெப்பம் அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

புவியின் தூய நீரில் 10 சதவீதத்தை தன்னகத்தே கொண்டுள்ள இத்தீவில் 1.8 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்புள்ள பிரதேசம் பனிப்பிரதேசமாகும் இப்பிரதேசம் வருடாந்தம் சுமார் 257 சதுர கிலோமீற்றர் பனியை புவி வெப்பம் காரணமாக இழந்து வருகிறது.

2080 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இப்பிரதேசம் வருடாந்தம் 465 சதுர கிலோமீற்றர் பனியை இழக்குமென்று புதிய கணிப்பீட்டின் மூலம் தெரியவந்துள்ளது. இக்கணிப்பீட்டை டேனிஸ்-யு.எஸ் விஞ்ஞான ஆய்வுக் குழு வழங்கியுள்ளது. இந்த பனிப்பிரதேசம் உருகுவதால் கடல் மட்டங்கள் 107 மில்லிமீற்றர் அளவில் உயரும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

செய்மதி மூல அவதானிப்புகளில் இருந்து தெரியவந்துள்ளதாவது, 1993 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த நீர்மட்டம் 107 மில்லிமீற்றர்களால் அதிகரித்துள்ளது. கடந்த நூற்றாண்டை விட இந்த நூற்றாண்டு நீர்மட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

2070 களின் இறுதிப் பகுதியில் பனிப்பிரதேசம் உருகுவதானது 66 சதவீதமாக அல்லது 1204 மில்லியன் சதுர கிலோமீற்றர் அதிகரிக்குமென்றும் அவர்கள் தெரிவித்தார். இது முன்னர் எதிர்பார்த்ததை விட இது அதிகமாகும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.



## அற்லஸ் கேள்வி - 171

**கேள்வி:** ஐ.நா பாதுகாப்பு சபையில் எத்தனை நாடுகள் உறுப்புரிமை பெற்றுள்ளன?

**சரியான விடை.......................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 171,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 169 இன் சரியான விடை: ஸ்டீஃபன் ஹார்பர்

**பரிசு பெறுவோர்**

த.சரவணன்,
பன்சல வீதி, ருவன் எலிய,
நுவரெலியா.

ந.நவசஞ்சிதா,
336, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.

ஃபாத்திமா ஃபரீதா,
32A, பெவரெலிய தோட்டம், தெனியாய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவுகளால் பயன் பெறுவோம்

**சூழலைப் பேணி நடப்பது நமது உடல் ஆரோக்கியத்திற்கு அவசியமானதாகும். எனினும், சூழலில் குப்பைகளை ஒழுங்கின்றிப் பரவலாகத் தேங்க விட்டு விடுவதால், அது சூழலில் பல பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுகின்றது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது காலத்தின் அவசியத் தேவையாகும்.**

## திண்மக் கழிவுகள் என்றால் என்ன?

அன்றாட மனித செயற்பாடுகளின் போது உருவாக்கப்படுகின்ற, மீள் பயன்பாட்டுக்கு உதவாதன எனக் கருதி, சூழலில் சேர்க்கப்படும் திண்மப் பொருட்களையே நாம் திண்மக் கழிவுகள் என்று குறிப்பிடுகின்றோம்.

இந்தக் குப்பைகளை சுற்றுப் புறச்சூழலில் கண்டபடி எறிவது சிலரின் பழக்கமாக உள்ளது. தமது வீட்டையும் வீட்டுச் சூழலையும் சுத்தப்படுத்தும் நோக்கத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு செயற்படும் இவர்கள், வெளிச்சூழலை மறந்து விடுவதோடு, இதனால் ஏனையவர்களுக்கு ஏற்படும் பாதகங்களை சிந்தித்துப் பார்ப்பது இல்லை.

திண்மக் கழிவுகளை,

* நகரக் கழிவுகள்
* வீட்டு வேலைகளின்போது வெளியாகும் கழிவுகள்
* சந்தைச் செயற்பாட்டுக் கழிவுகள் (அழுகிய காய்கறிகள், மீன் மற்றும் இறைச்சி, பழவகை)
* நிறுவன செயற்பாடுகளின்போது வெளியிடப்படும் கழிவுகள் (வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்) என

வகைப்படுத்திக் கொள்ளலாம்.

## உக்காத கழிவுகள்

நாம் பாவித்து அப்புறப்படுத்துகின்ற பொலித்தீன், பிளாஸ்டிக் மற்றும் சொப்பிங் பேக் ஆகியன உக்கி விடாத தன்மை கொண்டன. இவ்வாறான கழிவுகள் சூழலுக்குப் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியன.

## திண்மக் கழிவுகளினால் சூழலில் ஏற்படும் பாதிப்புகள்

* காற்று அசுத்தமடைதல்.
* நீர் அசுத்தமடைதல்.
* சமூக-பொருளாதாரச் சிக்கல்கள்.
* மரபணு வேறுபாடுகள் மாற்றமடைதல்.
* சுற்றுச் சூழல் மாசுபடுதல்.
* சுகாதாரப் பாதிப்புகள் (நோய்கள் பரவுதல்).
* ஓசோன் படலத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் .

திண்மக் கழிவுகளை தற்காலத்தில் சரிவர அகற்றாமையும் மனிதனின் தவறான பழக்கவழக்கங்களுமே மேற்படி பாதிப்புகளுக்குப் பிரதான காரணிகளாக அமைகின்றன. எனினும், முன்னைய காலப்பகுதிகளில் இவ்வாறான பிரச்சினைகள் இருக்கவில்லை. அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட, கையாளப்பட்ட சில உத்திகளே இதற்குக் காரணம்.

### அன்று

மனிதனின் அன்றாட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான பொருட்கள் துணி, கண்ணாடி, இலை, மரப்பலகை, கடதாசி போன்றவற்றாலேயே தயாரிக்கப்பட்டிருந்தன. இவை இலகுவில் உக்கி விடும் தன்மை வாய்ந்தன.

இதன்போது சூழலில் கழிவுகள் சேர்வது குறைவாகவே இருந்தது.

### இன்று

அதிகளவு பிளாஸ்டிக், ரெஜிஃபோம், பொலித்தீன் பொருட்களின் பாவனை. இவை மீள் பயன்பாட்டுக்கு உதவாதன. உக்கும் தன்மை அற்றவை.

சூழலுக்கு மாத்திரமன்றி மனிதனதும் ஏனைய விலங்குகளினதும் சுகாதார வாழ்வுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியனவாக உள்ளன.






## எம்மை நோயாளிகளாக்கும் டயொக்ஸின்

நாம் பயன்படுத்தி விட்டு எறியும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருட்கள் உக்கி மண்ணோடு கலப்பதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது. அவற்றை எரிப்பதனால் 'டயொக்ஸின் வாயு' வெளியேறுகின்றது. இந்த வாயுவானது வளி மண்டலத்தில் தீர்க்கமாக செயற்படும் தன்மை கொண்டது.

அத்துடன், இந்த வாயு நமது உடலுக்குள் செல்லுமிடத்து சரும நோய்கள், இருதய நோய்கள், புற்று நோய்கள் மற்றும் சுவாச நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

## சூழலைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள்

இயன்றளவு பிளாஸ்டிக், பொலித்தீன், ரெஜிஃபோம் பாவனையைத் தவிர்த்தல்; அவற்றை எரிப்பதைத் தடுத்து மீள் பயன்பாட்டுக்கு ஏற்ப மாற்றுதல், கழிவுகளை நீரில் கொட்டாமல் இருத்தல், கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை வீசாமல் அவற்றுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பிரத்தியேக இடங்களில் மாத்திரம் கொட்டுதல், மண்ணுடன் உக்கி விடக்கூடியவற்றை மண்ணில் குழிகளை வெட்டிப் புதைத்தல் அல்லது (கொம்போஸ்ட்) இயற்கை உரம் தயாரித்தல் போன்ற செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதோடு, கழிவுப் பொருட்களை இயன்றளவு மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்துவதனூடாக நாம் சூழல் மாசடைவதைத் தவிர்க்கலாம்.

## கழிவுகளை வகைப்படுத்துவதானது மீள் பயன்பாட்டிற்கு இலகுவாக இருக்கும்

கழிவுகளை வகைப்படுத்த பின்வரும் நிறங்களைப் பயன்படுத்துவோம்.

**பச்சை-காபன்**
**நீலம்-கடதாசி**
**மண்ணிறம்-உலோகம்**
**சிவப்பு-கண்ணாடி**
**செம்மஞ்சள்-பிளாஸ்டிக்**



கொம்போஸ்ட் கொள்கலன்



## கழிவுகள் சேர்வதைக் குறைக்க மேலும் சில வழிவகைகள்

* மரத்திலான வீட்டுத் தளபாடங்களைப் பயன்படுத்துங்கள்.
* பிளாஸ்டிக் போத்தல்களுக்குப் பதிலாக கண்ணாடிப் போத்தல்களைப் பயன்படுத்துங்கள்.
* பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக துணி, பிரம்புகளினால் தயாரான பைகளைப் பயன்படுத்துங்கள்.
* பிளாஸ்டிக் பாத்திரங்களுக்குப் பதிலாக களிமண் பாத்திரங்களைப் பயன்படுத்துங்கள்.
* விரைவில் உக்கி விடும் தன்மை கொண்ட பொருட்களைக் கொள்வனவு செய்யுங்கள்.
* கடதாசி, உணவுப் பொருட்கள், தேங்காய் சிரட்டைகள், பிளாஸ்டிக், கண்ணாடி, உலோகப் பொருட்கள் என்று கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி அதனை உரிய இடத்தில் கொடுத்து பண வருவாயையும் ஈட்டிக் கொள்ளுங்கள்.


இவற்றைக் கருத்தில் கொண்டு சூழலைப் பாதுகாக்கும் பொழுது நாம் நல்லதோர் உலகைக் காண்பதுடன் எதிர்கால தலைமுறையினருக்கும் புதியதோர் உலகை ஏற்படுத்திக் கொடுத்தவர்களாவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒவ்வோர் இரவும் வித்தியாசமான அனுபவம்

படம் ஓட்டும் முயற்சியில் இப்பொழுதே ஈடுபடவேண்டாம் என்றும் இன்னும் சில நாட்களுக்கு வேலையை நன்றாகப் படித்துக் கொள்ளுமாறும் மாதவன் கூறியது விமலுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. அதனால், மாதவனிடம்



விடைபெற்றுக்கொண்டு சிறிது நேரம் போய் படுத்திருந்துவிட்டு வரலாமென்று தனது அறைக்குப் போனான். அப்போது அவனை முதலாளி கண்டுவிட்டார். உடனே, ''என்னப்பா விமல்.... ஏன் அங்க இங்க சுத்திக்கிட்டு இருக்கே. போய் படுத்து நல்லா ரெஸ்ட் எடு'' என்று கூறினார்.

முதலாளி மீது இப்பொழுது அவனுக்கு வெறுப்பு இருக்கவில்லை. ''சரி முதலாளி'' என்று கூறிவிட்டுப் போகத் தயாரானான். அப்போது அவர்..,

''ம்.. சரி இங்க கொஞ்சம் வா....'' என்றதும் அவர் அருகில் சென்றான்.

''இனிமே, நீ 'பஞ்சிங்' அடிக்கப் போகவேண்டாம். இங்கேயே இருந்து கவனிச்சிக்கிட்டாப் போதும்'' என்றார்.

அவர் கூறியதைக் கேட்கையில் அவனுக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. தனக்குக் காலில் காயமேற்பட்டதும் ஒருவகையில் நல்லதாகப் போய்விட்டது என்று நினைத்துக் கொண்டான்.

ஆனாலும், மதில் சுவருக்கு அந்தப் பக்கம் பாழடைந்த வீட்டுக்கு அருகில் இருந்து தன் மீது எதனையோ வீசி அடித்த அந்தக் கரிய உருவம் என்னவாக இருக்குமென்று சிந்திக்கலானான்.

அந்தக் கரிய உருவம் பற்றியும் தியேட்டருக்குள் கண்ட பெண் பற்றியும் கென்டீனுக்கு அருகில் இருளில் பேச்சுக்குரல் கேட்டது பற்றியும் அவன் யாரிடமும் எதுவும் சொல்லவில்லை. சொன்னால் வெறும் வாயை மெல்பவருக்கு சிறிது அவல் கிடைத்தது போல் ஆகிவிடும். தன்னைப் பேய் கடித்துவிட்டது என்று புரளியை கிளப்பியவர்கள் இன்னும் என்னென்னவோ சொல்லிப் பயமுறுத்தி விடுவார்கள் என்று பலவாறு நினைத்துக் கொண்டே போய் அறையில் படுத்துக் கொண்டான்.

இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த இரவு காவல் வேலையை செய்ய வேண்டி இருக்குமோ என்று பலவாறு நினைத்தவன் 'ஒப்பரேட்டிங்' வேலையை நன்கு படித்துக் கொண்டதால் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான்.

தனியாக ஒரு நாளாவது படம் ஓட்டிப் பார்த்துவிட்டால் போதும் என்று ஏங்கியது அவன் மனம்.

அதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அன்றைய தினமும் மாலை மங்கி இரவை அண்மித்துக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு அனுபவங்கள். இன்று இரவு என்ன நடக்கப் போகிறதோ

**தன்னைப் பார்த்து பற்களை நறநறவெனக் கடித்த அந்தக் கரிய உருவம் எந்த நேரத்திலும் வந்து விடக்கூடுமோ என்று பீதியடைந்திருந்தான் விமல்**

என்று நினைக்கையில் அவனுக்கு குடல் நடுக்கம் ஏற்படுவது போல் இருந்தது. இன்று 'பஞ்சிங்' அடிக்கப் போகத் தேவையில்லை என்பதால் ஒருவாறு நிம்மதி ஏற்பட்டது.

நேரம் கடந்து நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. இரவுக்காட்சி முடிந்து எல்லோரும் போய்விட்டார்கள். அவன் தன்னந்தனியனாகி விட்டான். திரையரங்கு மீண்டும் வெறிச்சோடிய நிலைக்கு வந்தது. இனி விடியும்வரை பயந்து பயந்து நேரத்தைக் கடத்தவேண்டும்.

தியேட்டரின் முன் வாயிலுக்கு அருகில் உட்காரவும் பயமாக இருந்தது. ஏனென்றால் அங்குதான் பேச்சுக்குரல் கேட்டது. தியேட்டர் மண்டபத்துக்குள் போகவும் பயமாக இருந்தது. ஏனென்றால் அங்குதான் மோகினிப் பேயைக் கண்டான்.

தியேட்டருக்கு வெளியில் போய் அமர்ந்து கொண்டு இருக்கலாம் என்று யோசித்தான். அதற்கும் பயமாக இருந்தது.

தன்னைப் பார்த்து பற்களை நறநறவெனக் கடித்த அந்த உருவம் எந்த நேரத்திலும் இங்கு வந்து விடக்கூடுமோ என்பதுதான் அந்தப் பயம். எங்கு சென்று இருப்பது என்று சிந்தித்தபோது அவனுக்கு ஒரு புது யோசனை தோன்றியது.

(தொடரும்.....)

---

# புத்திசாலி சிறுவன்

ஓர் ஊரில் ரம்மி என்றொரு சிறுவன் இருந்தான். அவன் மிகவும் புத்திசாலி; தைரியசாலியும் கூட. ஒரு நாள் அவன் பாடசாலை விடுமுறைக்கு பக்கத்து ஊரில் இருக்கும் தன் பாட்டி வீட்டிற்குச் சென்றான்.

பாட்டி பேரனை இரண்டு மூன்று நாட்கள் தன் வீட்டில் வைத்திருந்தாள். பிறகு அவனை அவரது பெற்றோரிடம் திருப்பி அனுப்பி வைத்தாள். திரும்பிச் செல்லும் பேரனுக்கு விரலுக்கு ஒரு தங்க மோதிரத்தைப் போட்டுவிட்டாள். அவன் பாட்டியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். பாதித் தூரம் நடந்து வந்ததும் அவனுக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது. தூரத்தில் ஒரு சிறிய கிணறு தெரிந்தது. உடனே அந்தக் கிணற்றிலிருந்து எப்படி நீர் எடுப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் அந்த வழியாக ஒரு முரடன் வந்தான். அவன் ஒரு திருடன். அவன் தனியாக வந்த ரம்மியைப் பார்த்தான். அவனிடம் தங்க மோதிரம் இருப்பதையும் பார்த்தான். உடனே அதை அபகரிக்க நினைத்தான். மோதிரத்தையே திருடன் விடாமல் பார்ப்பதை ரம்மி கவனித்தான். தன்னை அடித்துப் போட்டுவிட்டோ அல்லது கொன்று விட்டோ தனது மோதிரத்தை திருடன் திருடிக் கொண்டு போய்விடுவான் என்று ரம்மி நினைத்தான். மறுநிமிடம் மிகுந்த பயத்துடன் அழுவது போல அழத் தொடங்கினான்.சிறுவன் கிணற்றருகில் நிற்பதையும் கிணற்றை எட்டிப் பார்த்ததையும் பின்பு திடீரென அழுவதையும் பார்த்த திருடன் ஒரு நிமிடம் விழித்தான். ''தம்பி ஏன் இப்போது நீ அழுகிறாய்?'' என்று கேட்டான்.

''அண்ணா.....! என் பாட்டி எனக்கு இந்த 1/2 பவுண் மோதிரத்தையும் ஐந்து பவுண் சங்கிலியையும் போட்டுவிட்டார். நான் தண்ணீர் தாகம் எடுத்ததால் இந்தக் கிணற்றடிக்கு வந்தேன். கிணற்றில் நீர் இருக்கிறதா என எட்டிப் பார்த்தேன். அப்போது



என் சங்கிலி கழன்று கிணற்றுக்குள் விழுந்து விட்டது. அதனை எடுக்காமல் வீட்டிற்குத் திரும்பினால் என் அப்பா என்னைக் கொன்றே விடுவார்'' என்று கூறி அழுதான். இதைக் கேட்ட திருடனின் மனம் ஏதோ திட்டம் போட்டது. 1/2 பவுண் மோதிரத்தையும் விட ஐந்து பவுண் சங்கிலி மிகவும் விலையுயர்ந்ததல்லவா? எனவே, அதனை கிணற்றுக்குள் இறங்கித் தேடி எடுக்க திருடன் முடிவு செய்தான். ''தம்பி நீ அழாதே! இதோ கிணற்றுக்குள் இறங்கி உன் சங்கிலியை எடுத்து வருகிறேன்'' என்று கூறினான்.

மறுநிமிடம் கிணற்றுக்குள் இறங்கினான். இதைக் கண்டதும் சிறுவன் அந்த இடத்தை விட்டு சிட்டாகப் பறந்தோடி விட்டான்.

திருடன் கிணற்றுக்குள் சங்கிலியை தேடோ தேடெனத் தேடிக் கொண்டிருந்தான். அதற்குள் ரம்மி தன் ஊருக்குள் ஓடி வந்துவிட்டான். தன் வீட்டிற்குச் சென்று பெற்றோரிடம் நடந்ததை கூறனான் பெற்றோர் அவனது சாமர்த்தியத்தைப் பெரிதும் புகழ்ந்தனர். ஆபத்து நேரத்தில் சாமர்த்தியமாகவும் தைரியமாகவும் செயல்பட நாமும் பழகிக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராலிம்பிக் போட்டிகள் எவ்வாறு அறிமுகமாகின?


லுட்விக் குட்மன்

பீஜிங்கில் ஒலிம்பிக் போட்டிகள் முடிந்துள்ள போதிலும் மற்றுமொரு ஒலிம்பிக் போட்டியானது 'பராலிம்பிக்' எனும் பெயரில் நடைபெற்றதை நீங்கள் அறிவீர்கள். 'பராலிம்பிக்' என்ற இந்தப் போட்டிகள் எவ்வாறு அறிமுகமாகியது? இதன் பின்னணி என்ன என்பதை சற்று ஆராய்வோம்.

'பராலிம்பிக்' போட்டியானது உடல் அவயங்களை இழந்த அல்லது அங்கவீனமானவர்களுக்கென்றே நடத்தப்படுகின்ற போட்டிகளாகும்.

லுட்விக் குட்மன் என்பவரே இந்த போட்டிகளின் ஆரம்பகர்த்தாவாக இருந்தவராவார். ஜேர்மனியரான இவர் ஒரு நரம்பியல் மருத்துவராவார். நாஸிப் படையினரிடமிருந்து தப்பிப்பதற்காக 1939 ஆம் ஆண்டில் இவர் இங்கிலாந்திற்கு தப்பிச் சென்றிருந்தார். இதனையடுத்து இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் 1948 ஆம் அண்டில் இங்கிலாந்தின் ஸ்டோக் மென்டவில் எனும் இடத்தில் மருத்துவமனையொன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த இவரது மனதில் ஒரு புதிய எண்ணம் உதித்தது. அதாவது, உடல் அவயங்களை இழந்தவர்கள் அல்லது அங்கவீனமானவர்களை மீண்டெழச் செய்யும் நல்லதோர் சிகிச்சை முறையாக விளையாட்டானது அமையும் என்று அவர் திடமாக நம்பினார்.

1948 ஆம் ஆண்டில் லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற ஜூலை 29 ஆம் திகதியன்று, அங்கவீனமானவர்களுக்கான ஒலிம்பிக் போட்டியில் ஈட்டி எறிதல் போட்டியே முதலாவதாக நடைபெற்ற போட்டியாக அமைந்தது. பிரிட்டன் இராணுவத்தில் அங்கவீன நிலைக்கு ஆளாகிய 16 பேர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டிருந்தனர்.

நாளடைவில் வைத்தியர் குட்மனுக்கு அங்கவீனர்களுக்காக பிரிட்டனில் தனியான விளையாட்டுச் சங்கமொன்றை அமைத்தமைக்காக அவரைக் கௌரவிக்கும் முகமாக பிரிட்டன் அரசாங்கத்தினால் பலவித பட்டமளிப்புக்களும் விருதுகளும் அவருக்கு வழங்கப்பட்டன.

இதன்படி, அங்கவீனர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளின் பிதாமகனாக இவர் கருதப்படுகின்றார்.

இந்தப் போட்டிகளுக்கு 'பராலிம்பிக்' என்று பெயரிடப்பட்டது. இதன் அர்த்தம் எவ்வாறு அமைகின்றதென்றால் லத்தீன் மொழியில் 'பரா' என்று குறிப்பிடப்படுவதானது ஏதேனும் ஒன்றுடன் ஒன்று நடைபெறுவதை குறிப்பிடுவதாகும். ஆங்கில மொழியில் 'பரா' என்பது 'பெரரல்' என்ற வார்த்தையை அடியொட்டி அமையப்பட்டதாகும். இதற்கமைய 'மாற்று' என்று இதனைப் பொருள் கொள்ளவும் முடியும். அதனால்தான் 'பராலிம்பிக்' போட்டிகள் 'மாற்றுத்திறன்' போட்டி என்று தமிழ்படுத்தப்பட்டுள்ளது. ஒலிம்பிக் போட்டிகளைப் போலவே சமகாலத்தில் பராலிம்பிக் போட்டிகளும் நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெற்று வருகின்றது.

இன்றைய காலப்பருவத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இன்னுமொரு வகையிலும் இந்த 'பராலிம்பிக்' என்ற பதம் அர்த்தமுடையதாக அமைந்துள்ளது எனலாம். ஏனென்றால், அங்கவீனமானவர்கள் அநேகமானோர் தம்மை அங்கவீனர்கள் என்று அடையாளப்படுத்துவதை விரும்புவதில்லை.

இதன்படி, அங்கவீனர்களுக்கான விளையாட்டுப் போட்டி என்று குறிப்பிடுவதைவிட 'பராலிம்பிக்' என்று குறிப்பிடப்படுவதையே அவர்கள் விரும்புகின்றனர். 'மாற்றுத்திறன் மிக்கவர்களுக்கான போட்டி' என்று அவ்வாறு அர்த்தப்படுவது கௌரவம்மிக்க ஒரு பதமாகவே கொள்ளப்படுகின்றது. விதியின் செயலால் இவர்கள் அங்கவீனமாகியோ, ஊனமுற்றோ இருந்தாலும் அவர்களும் நமது சமூகத்தின் பங்காளிகளாவர். நமக்குக் கிடைக்கின்ற அனைத்து நன்மைகளும் சலுகைகளும் வாய்ப்புகளும் அவர்களுக்கும் கிடைக்கப் பெறல் வேண்டும். இவர்கள் மீது பரிதாபப்படுவதைவிட இவர்களும் நமக்குச் சமமானவர்களே என்று நோக்குவதே பொருத்தமாகப்படும்.

## பராலிம்பிக் போட்டிகளின் முக்கிய திருப்பு முனைகள்

✸ உலகிலேயே முதன்முதலாவது 'பராலிம்பிக்' போட்டிகள் 1948 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் ஸ்டோக் மென்டேவில் எனும் இடத்திலுள்ள மருத்துவமனையொன்றில் நடைபெற்றது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது உடல் பாதிப்புக்களுக்கு ஆளானவர்களே இந்த முதலாவது போட்டியில் கலந்து கொண்டிருந்தனர்.

✸ சர்வதேச மட்டத்தில் போட்டியாளர்கள் 1952 ஆம் ஆண்டில் பராலிம்பிக் போட்டிகளில் இணைந்து கொண்டனர். எனினும், ஒலிம்பிக் போட்டிகளுக்கு சரிசமமாக 'மாற்றுத்திறன்' மிக்கவர்களும் போட்டியிடும் வகையிலான போட்டிகள் 1960 ஆம் ஆண்டிலேயே நடைபெற்றது. ரோம் நகரில் நடைபெற்ற போட்டியின்போதே இந்த மாற்றம் நிகழ்ந்தது. இதன்போது 23 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி சக்கர இருக்கைகளில் வந்த 400 போட்டியாளர்கள் பராலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றினர்.

✸ பராலிம்பிக் போட்டியில் 20 வகையான போட்டிகள் நடைபெறுவதுண்டு. இதற்கென அங்கவீனங்களுக்கு உட்பட்டவர்கள் ஆறு வகையாக வகைப்படுத்தப்பட்டு போட்டிகள் நடத்தப்படும். மேற்படி போட்டிகளுக்காக அவர்களின் உடல்நிலை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

✸ பராலிம்பிக் போட்டிகளில் ஈட்டி எறிதல் போட்டி முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனினும், இதற்கென விசேடமான விதிமுறைகளும் உள்ளன.

பந்துவீச்சுப் போட்டியும் பராலிம்பிக் போட்டியில் இடம்பெறும் மற்றுமொரு போட்டியாகும். இதில் கால்பந்தாட்ட பந்தின் அளவிலான பந்தில் ஒரு மணியும் கட்டப்பட்டிருக்கும். இந்தப் பந்தினை எதிர்த்தரப்பின் 'கோலை' (Goal) நோக்கி தரைவழியே தள்ளி விட வேண்டும். முழுமையாக பார்வையிழந்த அல்லது பார்வைக் குறைபாடுடைய எதிரணிப் போட்டியாளர்கள் இந்தப் பந்தை கோலினுள் சென்று விடாதவாறு தடுத்து ஆடமுயற்சிப்பார்கள், பந்தில் பொருத்தப்பட்டிருக்கும் மணியின் ஓசையைக் கொண்டு இவர்கள் பந்து செல்லும் திசையை ஊகிக்கக் கூடியதாக இருக்கும்.

✸ சக்கர இருக்கையில் இருந்தவாறு நடைபெறும் போட்டிகளும் உள்ளன. வாள் சண்டை, றகர், டென்னிஸ் ஆகிய போட்டிகளை இங்கு குறிப்பிடலாம்.

✸ வொலிபோல் போட்டியானது தரையில் அமர்ந்தவாறு விளையாடும் விதமாக நடத்தப்படும். பொதுவாக வொலிபோல் விளையாடும் திடல் மாற்றுத்திறன் மிக்கோருக்காக சிறியதாகவே அமைந்திருக்கும்.

✸ ஏனைய போட்டிகளைப் போலவே பராலிம்பிக் போட்டிகளிலும் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து பாவித்துள்ளனரா என்பது சோதிக்கப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற பராலிம்பிக் போட்டியின்போது ஜூடோ போட்டியில் தங்கம் வென்ற போட்டியாளர் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை பாவித்தமைக்காக வழங்கப்பட்ட தங்கப்பதக்கம் மீளப் பெறப்பட்டது.

✸ இம்முறை 'பீஜிங்' பராலிம்பிக் போட்டியில் 150 நாடுகளின் சார்பாக 4000 ற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

✸ இலங்கை சார்பாக ஐந்து போட்டியாளர்கள் இம்முறை பராலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றியிருந்தனர். எனினும், இவர்களில் சக்கர இருக்கை டென்னிஸ் போட்டியில் கலந்து கொண்ட உபாலி ராஜகருணா என்பவர் மட்டுமே இரண்டாவது சுற்று வரையாவது முன்னேறியிருந்தார். ஏனையவர்கள் அனைவருமே முதல் சுற்றிலேயே தோல்வியை சந்தித்தனர்.

## பராலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற வருடம்/நகரம்

- 1960 - ரோம் (இத்தாலி)
- 1964 - டோக்கியோ (ஜப்பான்)
- 1968 - டெல் அவிவ் (இஸ்ரேல்)
- 1972 - ஹைட்டில்பேர்க் (மே.இ.தீவுகள்)
- 1976 - டொரொன்டோ (கெனடா)
- 1980 - என்ஹம் (நெதர்லாந்து)
- 1984 - ஸ்டோக் மென்டெவில் (இங்கிலாந்து)
- 1988 - சோல் (தெ.கொரியா)
- 1992 - பர்ஸிலோனா (ஸ்பெயின்)
- 1996 - எட்லான்டா (ஐக்கிய அமெரிக்கா)
- 2000 - சிட்னி (அவுஸ்திரேலியா)
- 2004 - எதென்ஸ் (கிறீஸ்)
- 2008 - பீஜிங் (சீனா)

## பராலிம்பிக்கில் இடம்பெறும் போட்டிகள் வருமாறு

ஈட்டி எறிதல், மெய்வல்லுனர் போட்டிகள், சைக்கிள் ஓட்டம், குதிரை ஓட்டம், அணிக்கு ஐந்து பேரைக் கொண்ட கால்பந்துப் போட்டி, அணிக்கு ஏழு பேரைக் கொண்ட கால்பந்தாட்டப் போட்டி, கோள் பந்து, ஜூடோ, படகு ஓட்டம், துப்பாக்கி சுடுதல், நீச்சல், மேசைப்பந்து, வொலி போல், வாள்சண்டை, றகர், டென்னிஸ் ஆகியன பராலிம்பிக்கில் நடைபெறுகின்ற சிலவகைப் போட்டிகளாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புளியங்காய்

கிரகரியன் நாட்காட்டியில் இது பத்தாவது மாதம். 31 நாட்களைக் கொண்டமைந்த மாதங்களில் ஏழாவது மாதம். ரோமானிய நாட்காட்டியின்படி இது எட்டாவது மாதமாக விளங்குகின்றது. October எனும் பெயர் 'Octo' எனும் லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து உருவாகியதாகக் கூறப்படுகின்றது. லத்தீன் மொழியில் Octo என்பது 'எட்டு' என்று அர்த்தப்படுகின்றது.

தமிழ்வருடக்கணக்கில் இது 'ஐப்பசி' மாதமாகும். அவ்வாறே இஸ்லாமிய வருடக்கணக்கின்படி 'ஷவ்வால்' என்று பெயர் பெறுகின்றது. சிங்களத்தில் இம்மாதத்திற்கு 'வப்' என்று பெயர்.

இந்துக்கள் ஐப்பசி மாதத்தில் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்கின்றனர். அவர்கள் அன்றைய தினத்தில் புத்தாடை அணிந்து, பலகாரங்களை உண்டு மகிழ்ந்து, பட்டாசுகளைக் கொளுத்தி, உற்றார் உறவினர்களுடன் கொண்டாடுவார்கள்.

# ஒக்டோபர் மாதத்தில்....



டெபேயுய்யா

இவ்வருடத்தில் இந்த மாதத்தில்தான் முஸ்லிம்களின் ஈகைத் திருநாளாம் நோன்புப் பெருநாளும் அமைந்துள்ளது. முஸ்லிம்கள் முன்னைய மாதம் முழுவதும் நோன்பிருந்து, அதை முற்றாக நிறைவு செய்ததையடுத்தே இவ்வாறு பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

இலங்கையில் பொதுவாக சேனைப் பயிர்ச்செய்கையும் நெற்பயிர்ச்செய்கையும் இம்மாதத்திலேயே ஆரம்பிக்கப்படுகின்றன.

ஒக்டோபர் மாதத்தின் அதிர்ஷ்டக் கல்லாக பலநிறம் காட்டும் மாணிக்கக் கல்லான Opal குறிப்பிடப்படுகின்றது. இம்மாதத்திற்குரிய பூவாக 'கெமீலியா' விளங்குகின்றது.

**ஒக்டோபர் மாதத்தின் ஏனைய தினங்களில் அனுஷ்டிக்கப்படுகின்ற விசேட தினங்களாவன:**

- **ஒக்டோபர் 01 - உலக சிறுவர் தினம் மற்றும் உலக வயோதிபர் தினம்.**
- **ஒக்டோபர் 05 - உலக ஆசிரியர் தினம்.**
- **ஒக்டோபர் முதல் திங்கட்கிழமையில் உலக வதிவிடத்தினம்.**
- **ஒக்டோபர் 06 - உலக தபால் தினம்.**
- **ஒக்டோபர் 10 - உலக மனநல தினம்.**
- **ஒக்டோபர் 16 - உலக உணவு தினம்.**
- **ஒக்டோபர் 24 - ஐக்கிய நாடுகள் தினம்.**

## காலநிலை பற்றி...

இலங்கைக்கு அதிக மழைவீழ்ச்சி கிடைக்கும் மாதமாகும். உள்நாட்டுப் பருவ மழை ஆரம்பமாவது இம்மாதத்தில்தான். சாதாரணமாக நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் மாலைவேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சாதாரண வெப்பநிலை நிலவும். ஓரளவு காற்று வீசக்கூடும். சில பிரதேசங்களில் அதிகரித்த மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்படவும் வாய்ப்புண்டு. இடி-மின்னல் குறித்து சற்று அவதானத்துடன் இருக்க வேண்டும். சிலவேளைகளில் இலங்கையை அச்சுறுத்தும் வகையில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படலாம். அதன்போது எதிர்பாராத எந்தவொருவேளையிலும் மழையுடன் கடுங்காற்றும் வீசக்கூடும்.



பப்பாளி



அவிச்சியா



கெமீலியா

## விலங்குகள் குறித்த அவதானிப்பு

மழைவீழ்ச்சியுடனான காலநிலை நிலவுவதால் ஈருடகவாழிகளை அதிகம் காணலாம். இதே வேளை, 'அவிச்சியா' எனும் பறவையினம் வட இந்தியாவின் இமய மலைக்காடுகளிலிருந்து இலங்கையை நோக்கி வருவதும் இம்மாதத்தில்தான். பொதுவாக தலைமறைவாக வாழும் இந்த பறவையினத்தின் வருகையை சுற்றுப்புறத்தில் அவை எழுப்பும் இனிமையான கீச்சிடலை வைத்து அறிந்து கொள்ளலாம். இவை நிலத்தில் துள்ளித் துள்ளிச் சென்று தமது இரையைப் பெற்றுக்கொள்ளும். ஏப்ரல் மாதத்தில் மீண்டும் தனது தாய்நாடு நோக்கிப் பறந்து விடும்.



பெரிய நாய்

## உடுத்தொகுதிகள் அவதானிப்பு

இரவு 8.00 மணியளவில் வானில் துலாம், தனுசு, மகரம், கும்பம், மீனம், கெசியோபியா, கடகம், பெரிய நாய், சிறிய நாய் ஆகிய உடுத்தொகுதிகளை அவதானிக்கலாம். அதிகாலை 4.00 மணியளவில் மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம், வேட்டைக்காரன், கெசியோபியா, பெரிய நாய், சிறிய நாய் போன்ற உடுத்தொகுதிகளைக் காணலாம்.



ஒபல்

## பூத்துக் குலுங்கிக் காய்க்கும் மரங்கள்

**பூக்கள்**

- டெபேயுய்யா - *Tabebuia chrysantha*
- அசோக மரப்பூ - *Saraca asoca*
- கெமீலியா - *Camellia japonica*

**பழங்கள்**

- விளாம்பழம் - *Limonia acidissima*
- நெல்லிக்காய் - *Phyllanthus emblica*
- புளியங்காய் - *Tamaridus indica*
- பப்பாளி - *Carica papaya*

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்குப் புதிர் 2



(A) தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராகப் பணி புரியும் லோராவின் மாதாந்த சம்பளம் 35,000.00 ரூபாவாகும். அவளது வீட்டுச் செலவுகளுக்காக மாதாந்தம் 12,000.00 ரூபா செலவாகிறது. போக்குவரத்துச் செலவுகளுக்காக மாதத்துக்கு 3250.00 ரூபா ஒதுக்கப்படுகின்றது. சம்பளம் கிடைத்தவுடன் வீட்டுச் செலவுகளுக்குள் உள்ளடக்கப்படுகின்ற வீட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்களை கடைக்குச் சென்று வாங்கி விடுவது லோராவின் வழக்கம். அதன்படி உணவுப் பொருட்களுக்கென்று 7000.00 ரூபா செலவிடப்படுகின்றது. இவைதவிர, இதர தேவைகளுக்காக 7500.00 ரூபா ஒதுக்கப்படுகின்றது. இவை எல்லாம் போக, எஞ்சிய தொகையை லோரா வங்கியில் வைப்பிலிடுவாள்.

(i) லோராவின் மாதாந்தச் செலவுகள் எவ்வளவு? ..........................

(ii) வங்கியில் வைப்பிலிடப்படுகின்ற தொகை எவ்வளவு?..........................

(iii) வீட்டுச் செலவுகளைத் தவிர்த்து, லோராவிற்கு உள்ள செலவுகள் எவை?

* அவற்றிற்காக செலவாகும் தொகையை தனித்தனியே குறிப்பிடுக. ..........................

(iv) 6 மாதங்களின் பின் லோராவின் வங்கிக் கணக்கில் இருக்கக் கூடிய மொத்தப் பணத்தொகை எவ்வளவு?..........................

(B) பொருத்தமான சர்வதேச குறியீடுகளுடன் இணைக்க

| A | B |
|---|---|
| 1. மஞ்சள் கொடி | 1. பண்பாடு |
| 2. தாமரை | 2. வளர்ச்சி |
| 3. செஞ்சிலுவை | 3. தொற்றுநோய் |
| 4. தலைகீழாகக் கொடி | 4. மருத்துவ உதவி |
| 5. சக்கரம் | 5. துன்பம் |






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.10.08 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 176
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## ஒரே மாதிரியான உருவில் X அடையாளமிடுக 1



## குறள்களைப் பூர்த்தி செய்க 3

A

a) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
..........................

b) பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
..........................

c) ..........................
நீரினும் நன்றுஅதன் காப்பு.

d) அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
..........................

e) ..........................
பிணியன்றோ பீடு நடை.

B

1. குற்றமே கூறி விடும்.
2. செய்தொழில் வேற்றுமை யான்.
3. ஏரினும் நன்றால் எருவிடுதல் இட்டபின்.
4. அணியன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அஃதுஇன்றேல்
5. உறைபதி என்னும் உலகு.

## வழி காட்டுங்கள் 4



## அறிவுக்கு விருந்து 173 விடைகள்

**போட்டி: 01**

(A)
1. சன்மார்க்கம்
2. மண்ணெண்ணெய்
3. தாரதரம்
4. வட்டாரமொழி
5. பயிற்சிப் பட்டறை

(B)
1. சேவகி
2. விதவை
3. பண்டிதை
4. மருத்துவிச்சி
5. பெருமாட்டி

**போட்டி: 02**

| (A) | (B) |
|---|---|
| a) 9 ஆண்கள் | 1-2 |
| b) 14 கதிரைகள் | 2-1 |
| c) 14 பேர் | 3-2 |
| d) 12 கதிரைகள் | 4-3 |
| e) 2 பேர், 1 கதிரை | |

**போட்டி: 03**


A) 21 முகங்கள் (சிறிய கட்டங்கள் 20 உள்ளன. அவற்றில் ஒவ்வொரு முகம். இவை எல்லாம் சேர்த்து ஒரு முகம்)

B) ஆம்

**போட்டி: 04**

வெள்ளை நிறக்கற்கள் உள்ள பகுதியை கூர்ந்து அவதானியுங்கள். ஓநாயின் முகம், முன்னங்கால்கள் தெரியும். அதனைத் தொடர்ந்தவாறு ஏனைய பகுதிகளும் தெரியும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.187 5




**மேலிருந்து கீழ்**

01. (பொதுவாக) நிம்மதி, வேதனை அல்லது கவலையின்போது வெளியிடுவது.
02. பேரு நாட்டின் தலைநகரம்.
03. நோய்-ஒத்தகருத்துச் சொல்.
05. 'ஏழு மலைகளின் நகரம்' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் நகரம்.
06. மகத்தான தன்மை என்றும் பொருள்படும்.
07. தொனி-ஒத்தகருத்துச் சொல்.
08. திருப்பித் தருவதாகக் கூறி பெறப்படுவது. (குழம்பி)

**இடமிருந்து வலம்**

01. ஊனமுற்றவர்களுக்காக நடத்தப்படும் ஒலிம்பிக் போட்டி இவ்வாறு அழைக்கப்படுகின்றது.
04. இரண்டு பக்கங்கள் இணையும் போது ஏற்படுவது.
06. (பொதுவாக) அரசன், அரசி தமது அதிகாரத்தின் சின்னமாகத் தலையில் அணிவது.
09. வெள்ளிக் கோளை இப்பெயராலும் அழைப்பதுண்டு.
10. ஒருவரது வாழ்வில் வளர்ச்சி அல்லது முன்னேற்றத்தின் திருப்புமுனையை சிறப்பித்துக் கூறப் பயன்படுத்தும் சொல்.

### குறுக்கெழுத்துப்போட்டி 184 விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 01. எதிர்காலம் | 01. எகிப்து |
| 02. கிவி | 05. விதி (மாறி) |
| 03. துரியோதனன் | 06. சியோல் |
| 04. வளி | 07. காலை |
| 08. கன்று | 09. கனவான் |
| 09. கரை | 10. ரைன் |

குறுக்கெழுத்துப் போட்டி -187
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

**பாராட்டுப் பெறுவோர்**

சின்டரில்லா ஸ்பெக்,
பயனியர் வீதி, மட்டக்களப்பு.

எம்.ஆர்.எஃப்.மஹீஷா, தரம் - 9^A,
முஸ்லிம் பாலிகா ம.வித்., அக்குறனை.

மு.ஜீவநேசன், தரம் - 10,
பாமஸ்டன் த.வித்., தலவாக்கலை.

### அன்பு மாணவர்களே!

இது உங்கள் கவனத்திற்கு.....

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை கால தாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 173 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி | வெற்றியாளர் |
|---|---|
| போட்டி: 01 | ஜெ.சப்திகா, தரம் - 6^B, புனித சவேரியர் பெ.கல்., மன்னார். |
| போட்டி: 02 | எம்.எம்.எஃப்.முபீனா, தரம் - 9^E, மா/பதுரியா ம.கல்., கிருங்கதெனிய. |
| போட்டி: 03 | பயாஸ் அஹமட், தரம் - 7^B, களு/அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர். |
| போட்டி: 04 | எஸ்.கிஸாந்தன், தரம் - 6^A, ஹம்ஸா மு.ம.வித்., கொழும்பு-15. |
| போட்டி: 05 (குறு.போ-184) | செய்யத் அர்ஷத், தரம் - 8D², டீ.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு-07 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நெதர்லாந்து என அழைக்கப்படும் ஒல்லாந்து 12 பிராந்தியங்களைக் கொண்டது. அந்த பிராந்தியங்களில் வட ஹொல்லண்ட் (ஒல்லாந்து) தென் ஹொல்லண்ட் (ஒல்லாந்து) எனும் இரு பிரதான பிராந்தியங்கள் இருந்தன. அந்நாட்டின் தலைநகராகிய அம்ஸ்டர்டாம் நகரும் இந்த ஒல்லாந்தில்தான் இருந்தது. நெதர்லாந்து நாடு உலகெங்கும் ஒல்லாந்து எனும் பெயரிலேயே பிரபலம் அடைந்திருந்தது. அத்துடன், இந்த இரு பிராந்தியங்களும் மிகவும் வளம் நிறைந்தவை. பெரிய பிரித்தானியா என்று கூறுவதை விட இங்கிலாந்து எனக் கூறினால் உலக மக்களுக்கு அதிகம் தெரியும். அதுபோலவே தான் இந்த நெதர்லாந்து ஆனது ஒல்லாந்து என்ற பெயரில் பிரபலம் பெற்றிருந்தது. அந்நாட்டு மொழியில் ஹொலண்ட்டி என்பதற்கு ஹொலன்ஜே என்றே கூறினர். அது ஆங்கிலத்தில் டச் (Dutch) என்று அர்த்தமாகும். ஹொலன்ஜே தமிழ் உச்சரிப்பில் ஒல்லாந்து என அழைக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பாம்பு சட்டை போடுமா?

பாதையோரமாக உள்ள புதர்கள் அல்லது காடுகளுக்கூடாக நீங்கள் நடந்து செல்லும் போது பாம்பின் மேற்தோல் உரித்துப் போடப்பட்டிருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். இதனைப் பேச்சுவழக்கில் 'பாம்புச் சட்டை' என்று குறிப்பிடுகின்றோம். அடடா! அப்படியென்றால் பாம்புகள் சட்டை போடுகின்றனவா என்று நீங்கள் கேட்கக்கூடாது.

பாம்பின் உடம்புடன் ஒட்டி வளரும் தோலைத்தான் பாம்புச்சட்டை என்கின்றனர். பாம்புகள் இவ்வாறு தமது தோலை உரிக்க தட்ப வெப்பம், அவற்றுக்கு இரைகிடைக்கும் கால இடைவெளி, கிடைக்கும் இரையின் அளவு என்பன காரணமாக அமைகின்றன.



பாம்பு தோலுரிப்பதற்கு முன்பாக மரத்திலோ அல்லது சொரசொரப்பான ஏதாவது ஒரு பொருளின் மீதோ அதன் வாய்ப்பகுதியைத் தேய்க்குமாம். அத்துடன், குறித்த தோல்ப் பகுதியை அதன் உடம்பிலிருந்து இலகுவாக உரிப்பதற்கு ஏற்ப சிறிது கண்ணீரும் சிந்துமாம். இதனை அடுத்து அது உடலிலிருந்து வால் வரையுள்ள தோலை உரிக்கும்.



பாம்புகள் இவ்வாறு தோலை உரிப்பதற்கு சில நாட்களுக்கு முன்பிருந்து அவற்றின் கண்கள் இளநீல நிறமாகும். இதன்போது அவை தற்காலிகமாகப் பார்வைப் புலனை இழக்கும். இந்நிலையில் பாம்புகள் கோபத்துடன் இருக்கும் என்று உயிரியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இளவயதுப் பாம்புகளின் உடல் வளர்ச்சி வேகமாக இருப்பதால் அவை அதிக தடவைகள் தோலை உரிக்கின்றன. எனினும், வயதான பாம்புகள் அவ்வாறல்ல. இவற்றுக்கு சிலநேரம் தோலை உரிக்கும்போது உடம்பில் காயம் ஏற்படவும் வாய்ப்புண்டு.

இந்நிலையில் அந்தக் காயங்களை ஆற்றிக் கொள்வதற்காக அவை ஈரலிப்பான இடங்களை நோக்கிச் செல்வதோடு அதிக நீரையும் அருந்துமாம்.

## கண்ணாடிப் பாலம்



கண்ணாடியினால் அமைக்கப்பட்டிருக்கும் இந்தப் பாலத்தினை அமெரிக்காவின் 'கொலரடோ' நதிக்கு மேலாகக் காணமுடியும். 'கொலராடோ' நதியிலிருந்து 4000 அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த பாலத்தை பார்க்கும் போது ஒருவித அச்சம் தொற்றிக் கொள்வது இயல்பானதே. அதாவது இத்தனை அந்தரத்தில் காணப்படுகின்ற இந்தப் பாலம் எந்தளவிற்கு பலம் மிக்கது? என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

ஆயினும், உண்மையில் இந்த கண்ணாடிப் பாலமானது 71 பிரமாண்டமான போயிங் 747 விமானங்களை தாங்கக்கூடிய பலம் மிக்கதாக அமைக்கப்பட்டுள்ளதென்றால் ஆச்சரியப்பட்டுத்தான் போவீர்கள். 'கிராண்ட் கெனியன் கை வோர்க்' என்று இந்த பாலத்திற்குப் பெயரிடப்பட்டுள்ளது. நவீன பொறியியல் துறையில் ஒரு சாதனையாக இது கருதப்படுகின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 01, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org